தனிச்சுற்றுக்கு மட்டும்... விற்பனைக்கல்ல...

2026 January 1-15

அழகிய ஆரம்பம்

இன்று

ஈ இதழ்



முத்து ஆனந்த்

சிறுப்பிதழ்

வேலூர் ✆ 7010482479

இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
02



அனைவருக்கும் வணக்கம்.

இனிய ஆங்கில புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

இன்று-வின் வெற்றிகரமான ஒரு ஆண்டு முடிந்து இரண்டாம் ஆண்டு துவங்குகிறது.

படைப்பாளர்கள் முன்பைவிட உத்வேகத்துடன் எழுத வாழ்த்துகிறோம்.

இந்த இதழின் சிறப்பாசிரியர் திரு.முத்து ஆனந்த் மிகச் சிறப்பாக இதழை வடிவமைத்துள்ளார். நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்கள். நீங்களும் ஒரு இதழ் தயாரிக்க வாழ்த்துக்கள்.

இன்று இதழை வாசகர் வசதிக்காக அளவில் சிறிது மாற்றம் செய்து இரண்டு பத்திகள் இருப்பது போல் வடிவமைத்துள்ளோம். மாற்றம் ஒன்று தானே மாறாதது...

படிக்கும் வாசகர்கள் பலரும் இதுவரை படைப்பு வரவில்லை என்றும் வாட்சப்பில் கருத்து தெரிவித்துள்ளனர்... தொடர்ந்து படைப்புகள் அனுப்புங்கள்... அடுத்தடுத்த இதழ்களில் வெளியாகும்... மனம் தளர வேண்டாம்.

மின்னிதழ்களிலேயே இன்று மிகவும் கலர்புல்லாக உள்ளதாக தெரிவித்தவர்களுக்கும் நன்றி...

வெ.கோபிநாத், ஆசிரியர்.
முத்து ஆனந்த், சிறப்பாசிரியர்





பிப்ரவரி 2026
இன்று ஈ இதழ்
சிறப்பாசிரியர்

மலர்மதி



இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
03



காதல் பொங்கல்





பண்டிகை

நீ
கோபப்பட்டால்
போகி!
நீ
சிரித்தால்
பொங்கல்!
இதை விட
வேறென்ன பண்டிகை
வேண்டும் எனக்கு?!

முத்தம்

ஒரு
முத்தமிட்டு விட்டுப்
போ அன்பே!
பொங்கல்
கொண்டாடிக் கொள்கிறேன்
நான்!

கூலி

கரும்பு தின்னக்
கூலி கிடைக்கிறது!
ஆம் அன்பே
உன்
காதலைத் தின்ன
முத்தம் கொடுக்கிறாய்
நீ
எனக்கு!

தேவை

உன்
முத்தங்கள்
கிடைக்காத
நேரங்களில் தான்
எனக்குத்
தேவைப்படுகிறது
கரும்பும்
சர்க்கரைப் பொங்கலும்!

பொங்கல்

நீ
சிரிக்கும் போதெல்லாம்
பொங்கல்
கொண்டாடுகிறது
என்
கவிதைகள்!

முத்து ஆனந்த் யார்?
அடுத்தடுத்த
பக்கங்களில்....

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
04

புதுக் கவிதை

பழுதடைந்த
தொலைபேசியில்
ஒரு போதும்
அழைப்புகள் வர போவதில்லை
விட்டு போன பின்பும்
கெட்டு போன காதல்
நினைக்க போவதில்லை
இணைகள் எப்போதும்
எல்லோருக்கும்
ஒரே போல வாய்ப்பதில்லை
ஏற்றத் தாழ்வுகள் கொண்ட
கை விரல்களை போல!

சோர்ந்து போகும் போதெல்லாம்
சாய்ந்து கொள்ளடி
ஓய்ந்து போகும் வரை
என் தோள்கள்
உனக்காகவே காத்து
கொண்டிருக்கும்!

அந்த சாய்ந்த கோபுரம்
உலக அதிசயமென்றால்
என் தோள் சாய்ந்த
அதிசயமான உன்னை
என்ன சொல்வது?!



லி.நௌஷாத் கான்
971561093550



வேலூரின் சொத்து
நம்ம முத்து ஆனந்த்
சார் என சொல்லலாம்.
எந்த தலைப்பு
கொடுத்தாலும் சரி
அந்த தலைப்புக்கேற்றவாறு
அற்புதமான கருப்பொருளில்
அருமையாக கவி படைக்கும் கவிஞர்
கவி உலகின் மார்க்கண்டேயர் நம்ம முத்து
ஆனந்த் சார் எனலாம்–ஏனெனில் அவர்
படைக்கும் ஒவ்வொரு கவிதையிலும்
இளமையும்–காதலும் ததும்பி ஓடும்.
மனதுக்கு பிடித்தமான தேநீரின் கடைசி
மிடறு போல இவரின் ஒவ்வொரு
கவிதையையும் கடைசி வரை மனது
படிக்க தூண்டி கொண்டே இருக்கும்.
அயராது மக்களுக்காக பாடுபடும் காவலர்
பணி புரிந்து கொண்டே தமிழுக்கு தன்
கவி மூலம் தொண்டாற்றி
கொண்டிருக்கும் என் பெரியண்ணாவை
வாழ்த்த வயதில்லை
அன்பால் வணங்குகிறேன்!

அன்புடன்
–லி.நௌஷாத் கான்–

என்னை வெறுக்க மட்டுமே
உனக்கு தெரியும்
வெறுத்தாலும்
உன்னை நேசிக்க மட்டுமே
எனக்கு தெரியும்!
நேசித்தல் எல்லாராலும்
இயலாத ஒன்று என
துடிக்கும் உன் இதயத்துக்கும்
புரியும்!

@-லி.நௌஷாத் கான்-@

என்னை காயப்படுத்த
நீ உதிர்க்கும்
வார்த்தைகள் தேவையில்லை
உன் கள்ள மௌனமே
போதுமானது!

@-லி.நௌஷாத் கான்-@

முகமூடியில் மறைந்தது
முகம் தானென்று
நினைத்திருந்தேன்
இப்போது தான் புரிந்தது
உன் மனமும் தானென்று!

@-லி.நௌஷாத் கான்-@

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்



காதல் கவிஞர் முத்து ஆனந்த்.

வேலூரில் வசிக்கும் நண்பர் முத்து ஆனந்த் பழகுவதற்கு இனிமையானவர்.
எளிமையான மனிதர்.
காதல் கவிதைகளை தங்கசுரங்கத்தில் தங்கம் வெட்டி எடுப்பது போல மனச்சுரங்கத்திலிருந்து அள்ளி எடுத்து அழகாக எழுதி வருகின்றார்.

தமிழக எழுத்தாளர் வாட்சப் குழுமத்தில் ஏழு ஆண்டுகளாக வாரம் தோறும் காதல் வெள்ளிக் கவிதைகளை தொடர்ந்து எழுதிவருவது மிகப்பெரிய சாதனையாகும்.

கவிதை மட்டுமல்ல பன்முக எழுத்தாளரான இவர் சிறுகதை, குட்டிக்கதைகள் ஜோக்ஸ்களும் சிறப்பாக எழுதுவார்.

பல பத்திரிகைகளில் இவரது படைப்புகள் இடம்பெற்று வருகையில் மின்னிதழ்களில் எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி தம் படைப்புகளை எழுதிவருவது சிறப்பான ஒன்று.

எழுதுவது மட்டுமின்றி சக படைப்பாளிகளின் படைப்பு இதழ்களில் வருகையில் ஆழ்ந்து வாசித்து பாராட்டி வாழ்த்துச் சொல்லி மகிழும் அவரது பண்பு மிகவும் பாராட்டுக்குரியது ஆகும்.

நண்பர் முத்து ஆனந்த் பத்திரிகையுலகில் மேலும் பல சாதனைகள் படைக்க அன்பு நல்வாழ்த்துகள்

அன்புடன்
நத்தம்.எஸ்.சுரேஷ்பாபு

முத்து ஆனந்த் கவிதை வரிகள் முத்துவை போல் முத்து முத்தாய் இருக்கும். கவிதையில் ஒரு காதல் அதுவும் தேன் சொட்டும் அளவுக்கு வார்தைகள் இருக்கும்.... கவிதை படிக்கும் போது அந்த கவிதையில் வரும் பெண்கள் நம்முனே இருப்பது போல் இருக்கும். அந்த அளவுக்கு நம் எண்ணங்கள் கவிதையோடு ஒன்றிவிடும்... எப்போது வெள்ளி வரும் நமக்கும் காதல் உணர்வு வரும் என்று ஆவலோடு இருப்பேன்...

மங்களம் ஜோனா
ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை
சென்னை

இணையவழி மோசடிக்கு பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in



இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
06

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்



முத்து ஆனந்தின் பேனா எது கொண்டு செய்யப்பட்டது தெரியுமா?

அருமை நண்பர் முத்து ஆனந்தை கடந்த 34 ஆண்டுகளாக அறிவேன்.

பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்.

முதல் நாள் முதல் சந்திப்பில் எப்படி பழகினாரோ, அதைப்போலவே இன்றளவும் சிறிதும் குறையாமல் பழகுகிறார்.

முத்து ஆனந்தை முதன் முதலில் சென்னையில், பெரம்பூரில் நண்பர் பா. உதயகண்ணன் அவர்கள் வீட்டில் சந்தித்தேன்.

அப்போது முதல் முறையாக நண்பர் மு.முருகேஷ் உடன் இணைந்து ஒரு ஹைக்கூ தொகுப்பு நூலை வெளியிட்டோம். அந்தத் தொகுப்பாளர்களுள் முத்து ஆனந்தும் ஒருவர்.

மிக இனிமையான நாட்கள் அவை.

அன்றைய 1990 காலகட்டங்களில் பல வார இதழ்கள், மாதம் இருமுறை இதழ்கள், மாத இதழ்கள் வெளிவரும்.

எல்லாவற்றிலும் எழுதுவோம்.

விவேக் பப்ளிகேஷன்ஸ் சார்பாக வெளியான எல்லா மாத நாவல்களிலும், மாதம் இருமுறை வெளியான சூப்பர் நியூஸ் இதழிலும் எழுதியிருக்கிறோம்.

அப்போது அங்கு பணி புரிந்த படுதலம் சுகுமாரம் அவர்களுடன் வேலூரில் நடந்து ஒரு விழாவில் பங்கேற்கச் சென்றபோது, முத்து ஆனந்தின் வீட்டிற்கும் சென்றோம். அத்தனை உபசரிப்பு. ஒரு இரவு தங்கி இருந்து மறுநாள்தான் வந்தோம்.
மறக்கவே முடியாத சந்திப்பு.

இன்றளவும் நான் எப்போது வேலூர் சென்றாலும் முத்து ஆனந்தை சந்திக்காமல் திரும்புவதே இல்லை.

அங்கு மட்டுமல்ல, ஏதாவது விழாவை முன்னிட்டு சந்திக்க நேர்ந்தால் அளவளாமல் இருந்ததே இல்லை.

முத்து ஆனந்த் என்றால் காதல் கவிதைகள்தான் ஞாபகம் வரும்.

அந்த அளவுக்கு காதலை அதன் அத்தனை பரிமாணங்களுடன்...
எழுதிவார்...
எழுதுகிறார்....
எழுதுவார்...!!

காதலின் ரசத்தை இத்தனை விதமாக எழுதுகிறாரே என்று பலரும் ஆச்சர்யமாகப் பார்ப்பதுண்டு.

அவர்களுக்கு எல்லாம் தெரியாத ஒரு ரகசியத்தைச் சொல்கிறேன்

முத்து ஆனந்தின் பேனா மன்மதனின் கரும்பு வில்லில் இருந்து எடுத்து செய்யப்பட்டது என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த ஒன்று!!

முத்து ஆன்ந்துடனான நட்பும், முத்து ஆனந்தின் காதல் கவிதைகளும் என்றென்றும் தொடரவேண்டும்....

மிக்க அன்புடன்



ஸ்ரீநிவாஸ் பிரபு
✆ **9340051321**

இன்று ஏ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
07

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்



நண்பர் முத்து ஆனந்த், காதல் கவிதைகளின் காதலர். பிறர் கவிதைகளை ரசித்து உடனடியாக தன் பாராட்டுகளைத் தெரிவிக்கும் பண்பாளர். எண்ணற்ற கவிதைகளின் படைப்பாளர். ஏதோ பெயருக்கு எழுதுபவர் அல்ல. கவிதைகளின் தலைப்பே ரசிக்கும்படி ஜனரஞ்சகமானதாக இருக்கும். காதல் இவரின் கவிதைகளில் நம்மை முத்தமிட்டு கொஞ்சும். இளைஞர்களுக்கு, காதலிக்கத் தூண்டும் வயாகரா; வயதானவர்களுக்கு, தன் பழைய காதல் நினைவுகளை அசைபோடச்செய்யும் நயாகரா. மொத்தத்தில் 'கவிதை முத்து' ஆனந்த்! அவர் வாழ்க வாழ்க காதல் போல் என்றும் வாழ்க!!

-வி.சி. கிருஷ்ணரத்னம்,
எழுத்தாளர், சென்னை - 100.



திரு முத்து ஆனந்த் அவர்களை பற்றி ....

திரு முத்து ஆனந்த் சார் அவர்கள் மிகச் சிறந்த படைப்பாளி. அவர் அனைத்து விதமான கவிதைகளில் ஜொலிக்கிறார். குறிப்பாக காதல் கவிதைகளில் புகுந்து விளையாடுகிறார். பொதுவான கவிதைகளும் இவருக்கு அத்துபடி.
இவை தவிர ஆன்மீக கட்டுரைகள் விழிப்புணர்வு கட்டுரைகள் அதிகம் எழுதி வருகிறார். ஜெயிலர் பணியில் இருந்து கொண்டு இவர் படைப்புகளை வழங்கி வருவது ஆச்சரியமாக உள்ளது. ஏனென்றால் ஜெயிலர் பணி என்பது மிகவும் கடினமான பணியாகும். இவ்வளவு பணிச்சுமையிலும் அனைத்து பத்திரிகைகளிலும் கவிதைகள் கட்டுரைகள் எழுதி வருவது பாராட்டத்தக்கது. இவரது காதல் கவிதைகளுக்காக இவருக்கு காதல் கவியரசு என்ற பட்டத்தை வழங்கலாம்.

என்றும் அன்புடன்
நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135



இன்று இதழ் ஜனவரி 2026 இதழில், வேலூர் முத்து ஆனந்த் பற்றி சில வரிகளும் வாழ்த்துகளும். முத்து ஆனந்த் அவர்கள் சிறந்த படைப்பாளி அதிலும் காதல் கவிதை படைப்பதில் தமிழக உமர்கய்யாம் மேலும் பல படைப்புகள் சிந்திக்க வைக்கும் சமுதாய நோக்காக இருப்பது கூடுதல் சிறப்பு

கே.அசோகன்,
சென்னை



இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
08

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்





கவிஞர் முத்து ஆனந்த் அவர்கள் தொடர்ந்து இன்று இ இதழில் பயணித்துக் கொண்டு இருக்கிறார். அவரது கவிதைகள் முதலான அனைத்து படைப்புகளும் மிகவும் சிறப்பாக இருக்கும். எழுத்துலகில் அவருக்கென்று ஓர் தனி நடை உண்டு. அவரது எழுத்துக்கள் எப்பொழுதும் படிக்கும் ஆர்வத்தினை தூண்டும் விதமாகவே இருப்பது வெகுசிறப்பு. கவிஞரது இலக்கிய பணி மென்மேலும் சிறந்து விளங்கிட மனமார்ந்த வாழ்த்துகளை கூறி மகிழ்கிறேன்.



கவிஞர் சசிகலா திருமால்
கீழப்பழுவூர்.

மனிதர்க்கு மட்டுமன்று; விலங்குகள், பறவைகள், புழு பூச்சிகள் என்று நடமாடும் அனைத்து உயிர்களுக்கும் காதல் உணர்வு பொதுவானது. காதல் இல்லா வாழ்வு நரகமே! தூய காதல் அமைந்துவிட்டால் அதுவே பேரின்பம். அத்தகைய காதல் உணர்வுகளைப் புதுமையான சொற்களால் ரசிக்கும்வண்ணம் தொடர்ந்து கவிதை படைத்துவரும் கவிஞர் முத்து ஆனந்த் அவர்களுக்கு எனது பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

அன்புடன்,
எஸ். குமாரகிருஷ்ணன்,
ஆசிரியர்- அனிச்சம்.
(மின்னிதழ்- மாதந்தோறும்)

முத்து ஆனந்த் அவர்களின் கற்பனைக் கடலில் அள்ள அள்ள குறையாத கவிதை முத்துக்கள் கொட்டிக்கிடக்கின்றன. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் இவரது கவியமுதத்தை ருசித்து இருக்கிறேன். பல பத்திரிகைகளில் இவரது கவிதைகள் பரிசுகள் பெற்றிருக்கின்றன. இவரது கவிதைகள் பலவற்றை கல்லூரி மாணவ மாணவிகளும் ரசித்திருக்கிறார்கள். காதலை எழுதாத கவிஞர் எவருமே இல்லை. காதலுக்கு கவிதையால் இலக்கணம் படைப்பவர் நண்பர் முத்த ஆனந்த் வாழ்த்துக்கள் சார்

வீரன்வயல் வீ.உதயக்குமாரன்

காதல் கவிதைகளில் அசத்தும் முத்து ஆனந்த் அவர்கள் ஒரு கவிதை வெள்ளம் என்று கூறுவது மிகையில்லை..

இளமையும் துள்ளலும் நிறைந்தது அவரது கவிதைகள்..

வாழ்த்துக்கள்
வீ காசிநாதன், காசாங்காடு

இன்று எ இதழ்

7094053241
indhrumail@gmail.com
www.indhru.in

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்



திரு.முத்து ஆனந்த் அவர்கள் நான் நாள் வார|மாத இதழ்களில் 1990களில் துணுக்கு, கவிதை எழுதிக் கொண்டிருக்கும்போதே... அறியப்பட்டவர்
கதை, கவிதை, கட்டுரை, நகைச்சுவையென பல கலைகளிலும் வல்லவர்.
உண்மையைச் சொல்வதென்றால்..
முத்து ஆனந்த் மீது எனக்கு பொறாமை அதிகமுண்டு என்னிலும் பல்துறை வித்தகராக இருப்பதால்.
வார்த்தைகள் பிரயோகம்
அது கவிதைகளுக்கு யோகம்|
ஒடுங்கிய அந்த தேகத்தில்தான்
எத்தனை படைப்புகளுக்கு வற்றாத ஜீவநதியாக
கற்பனை பிரவாகம் ஊற்றெடுத்து ஓடுவது பிரமாதம்.
இவரது படைப்புகள் இடம்பெறாத தமிழக ஊடகங்கள் இல்லை. நான் 1982 களிலிருந்து பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருக்கிறேன் எனது கர்வம் கூட
முத்து ஆனந்த் அவர்களின் முன்னே நான் "ச்சும்மா" என்பதே சரியாகும். மேலும் காதல் கவிதை புனைவதில் இவரது
சொற்சிலம்பாட்டம் கண்டு வியக்காதோர்
இல்லை எனலாம்.
திறமைகள் ஒரு சேர இவரிடத்தில் குவிந்துகிடந்தும் இன்னும் இவர் தன் பெயரில் நூல்கள்
வெளியிடாதது ஆச்சரியம்.
விரைவில் இவரது படைப்புகள் அச்சேறும் என எண்ணுகிறேன்.
தமிழக எழுத்தாளர் குழுமத்தின் "வெள்ளி" விழா நாயகன்
முத்து ஆனந்த் அவர்களின் கட்டுரை"இன்று" இதழில் இடம்பெறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி.
வாழ்த்துகளுடன்...

"சோழா" புகழேந்தி
விழுப்புரம் - 605 106
அலைபேசி 70949 14328

முத்து ஆனந்த் சார்

கவிதை கடலில்
கிடைத்த " முத்து "
அவர்...

அவரின் எழுத்து
எப்போதும் மகிழ்ச்சி
தரும் – எனவே அவர்
பெயரில் " ஆனந்த்"(தம்)
அமைந்து விட்டது...

கம்பன் வீட்டு
கட்டுத்தறி கவி
பாடுவது போல்...

முத்து ஆனந்த்
சார் விடும்
மூச்சுக் காற்றும்



முத்தான கவிதை
பாடும்...

அவர் எழுத்துப்
பணி எந்நாளும்
தொடரட்டும்....

- G.SUNDARAMURTHI, MUSIRI.

என் மாமியாருக்கும் எனக்கும் ஒரே கலரில் புடவை எடுத்துக் கொடுத்தாருடி என் புருஷன்....

அதனால் என்னடி ?

புடவையை கட்டி இருக்கறது நான்னு கூடத் தெரியாமல் எனக்கும் பயந்து நடுங்கறாரு என் மாமனார் !

எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
செல் 9750-333-265



இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
10

டாக் டைம்



முத்து ஆனந்த் வேலூர் 7010482479

(வேலூர் வேலப்பாடியில் தோழிகள்)

"என்னடி, ஹோட்டல்ல 'சாப்பாடு' வாங்கறே?"

"என் 'மாமனாரைப் பாம்புக் கடிச்சிடுச்சு'டி அவரைப் போய்ப் பார்த்துட்டு வந்ததால 'சாப்பாடு' செய்ய முடியலை!"

"ஐய்யய்யோ, என்னாச்சுடி?"

"நீ பயப்படாதே, அவர் பிழைச்சிக்கிட்டாரு அந்தப் பாம்புதான் செத்திருச்சி!"

(வேலூர் தோட்டப்பாளையத்தில் தோழிகள்)

"ஏன்டி, டல்லா இருக்கே?!"

ஏன்டா 'தமிழ் வாத்தியார்' பையனை 'லவ்' பண்ணோம்ன்னு இருக்குடி!"

"ஏன்டி, என்னாச்சு?"

"மீட் பண்ணும் போதெல்லாம் 'இன்னா நாற்பது இனியவை நாற்பது'ன்னு பேசறான்டி!"

(வேலூர் அடுக்கம்பாறையில் தோழிகள்)

"ஏன்டி 'மழை' பேய்ஞ்சிக்கிட்டிருக்கு, இந்த நேரத்தில உன் 'மாமியாரை' ஏன்டி 'கடைக்கு' அனுப்பினே!?"

"அதனாலதான் அனுப்பினேன்!"

(வேலூர் சத்துவாச்சாரியில் அம்மாவும் மகளும்)

"எங்கடி போயிட்டு வரே?"

"பிரகாஷைப் பார்த்துட்டு வரேன்ம்மா!"

"உனக்கு எவ்வளவு 'திமிரு'டி! என் கிட்டயே சொல்வே!?"

"போதும் நிறுத்தும்மா! இருக்கிறதிலயே அவன் தான் நல்லவன்!"

(வேலூர் வேலப்பாடியில் அம்மாவும் பெண்ணும்)

"ஏன்டி, எப்பப் பாரு வெளியிலயே சுத்திக்கிட்டிருக்கே!"

"அம்மா, நீ பார்க்கறியே டி வி அதுல பார்க்கற 'சீரியல்களை'விட வெளியில எதுவும் 'மோசமா' நடந்துடாது!"

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
11

சிரிப்பு

ஆசிரியர் : "அப்பா பற்றி கட்டுரை எழுதச் சொன்னா டாஸ்மாக் கடை பற்றி எழுதியிருக்கியே ஏண்டா?

மாணவன் : எங்க அப்பாவையும் டாஸ்மாக் கடையையும் தனியா பிரிச்சு பார்க்க என்னால முடியலை சார்!

----------ஒருத்தி :

உனது வீட்டுக்காரரின் மறதி நோய்க்கு மருந்து கொடுத்த பிறகு ஏதாவது முன்னேற்றம் தெரிந்ததா?

அடுத்தவள் : இப்போது வேலைக்காரியை மட்டும் அடையாளம் தெரியுது,பெயர் சொல்லி அழைக்கிறார்



நாஞ்சில் சு.நாகராஜன்
பறக்கை, கன்னியாகுமரி
✆-9486387026





கவிதை

மெட்டி என்னவோ
அமைதியாக தான்
இருக்கிறது
இந்த கொலுசுகளும் கண்ணாடி
வளையல்களும் தான்
ஊரைக் கூட்டி
காட்டிக் கொடுக்கின்றன
முதலிரவு அறையில்
நடப்பதை

வைரமூக்குத்தி அணிந்தது/
பசுமை புற்கள்/
மார்கழி பனி காலம்/

மல்லிகை வாசத்தை
விரைவு அஞ்சல்
வாயிலாக
முகவரியில் சேர்த்து விட்டு
அடுத்த
முகவரிக்கு பயணப்பட்டது
அமைதியாக தென்றல்



கே.அசோகன்
சென்னை
✆90478 96065

முடிந்து விடும்{கவிதை}
..
பெற்றோரிடம் பேசுங்க..
பாசம் கூடும்

மனைவியிடம் பேசுங்க..
வாழ்க்கை இனித்திடும்

பிள்ளையிடம் பேசுங்க..
வாழ்க்கை மேம்படும்

உறவுகளிடம் பேசுங்க..
உறவுகள் மேம்படும்

நண்பர்களிடம் பேசுங்க..
நட்பு வலுப்படும்

வாகனம் ஒட்டும் போது..
வாகனத்தை நிறுத்திவிட்டு பேசுங்க
வாழ்ந்திடவாழ்க்கை கிடைக்கும்.



திருச்சிற்றம்பலம்
சுரேஷ்

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
12

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்



நான்கு "இதழ்களில்"
ஒரு காதல் பூ முத்தம்!
முத்த மழை பொழிந்திடும் இவரது
கவிதைகள் நித்தம்!!

முத்து ஆனந்த் எனும்
முத்த ஆனந்தின் கவிதை வரிகள்
ஒவ்வொன்றும் மன்மதனின்
மலர்க்கணை!

காதல் ரசம் சொட்டிடும்
இவரது கவிதைகளுக்கு
ஏதுமில்லை ஈடு இணை!!

- ரிஷிவந்தியா, தஞ்சாவூர்.

குடும்பத்தினர்
நலம்
விசாரித்துப்
பேச்சைத்
துவங்கி மெதுவாக பேசும்
மென்மையான மனிதர்
திரு முத்து ஆனந்த்.

ஏட்டைக் கொடுத்தால்
எழுத்துக்களால் நிரப்பி, காதல்
கவிதைகளென, கட்டுரைகள்
என, கதைகளென
எழுதிவிடுவார்.

எழுதுகோள் இவரின் உற்ற
நண்பர். அசைத்தபடி
இசையும். அத்தனையும்
அற்புதமான 'முத்து' தந்த
'முத்து'. அதுவே அவரது
'சொத்து'.

சக எழுத்தாளர்களை
ஊக்குவித்துப் பாராட்டும்
பண்புகள் நிறைந்த மனிதர்.
உற்ற நண்பர்.

வி.பிரபாவதி

காதல் கவிதைகளை
அனாயாசமாக எழுதி அசத்தும்
வித்தகர் திரு முத்து ஆனந்த்
அவர்கள்...

காதல் முத்தங்களில் இவ்வளவு
வகைகளா என்று பிரமிப்பு
ஏற்படுத்தும் இவரது கவிதைகளை
ஆய்வுக்கு எடுத்து முனைவர்
பட்டம் பெற எதிர்கால
இளைஞர்கள் முண்டியடித்து
முன்வருவார்கள் என்பதில்
ஐயமில்லை.

திரு முத்து ஆனந்த அவர்கள்
மேன்மேலும் பல இனிக்கும் காதல்
கவிதைகளை படைத்து கவிதை
உலகில் ஒரு ஜாம்பவானாக திகழ
எனது அன்பு வாழ்த்துகள்.

ஆர். ஹரிகோபி,
புது டெல்லி

பாராட்டு!
கவிஞர் முத்து ஆனந்த் என்
நெருங்கிய நண்பர்களில் ஒருவர்.
காதல் கவிதைகளிலும், முத்தக்
கவிதைகளிலும் தன் திறமையை
வெளிப்படுத்தியதால் நான் இவருக்கு
'முத்தானந்த் என்ற பட்டத்தை வழங்கி
மகிழ்ந்தேன். பொதுவாக கவிஞர்கள்
சிறிது யோசித்து எழுதுவார்கள்.
ஆனால், இவருடைய கவிதைகள்
சும்மா மடை திறந்த வெள்ளமாய்
சீறிப்பாய்ந்து வெளிவருகின்றன.
முத்தானந்த் அவர்கள் தொடர்ந்து பல
கவிதைகள் படைத்து மேன்மேலும்
புகழடைய வாழ்த்தி மகிழ்கிறேன்.

-மலர்மதி

www.indhru.in

வாழ்த்து சொல்ல வரவேற்கிறோம்...
உங்கள் அன்பானவர்களுக்கு
வித்யாசமான போஸ்டர்களை
அனுப்புங்கள்..

இன்று குழுமம்

இன்று ஈ இதழ்

தகவல்கள்

இன்று ஈ ஸ்டோர்

வாழ்த்து அனுப்ப...

நமது www.indhru வெப் சைட்டில் 2025 இதழ்கள், முக்கிய தகவல்கள், அரசு விடுமுறை தினங்கள், மத விடுப்பு தினங்கள், மாவட்டங்கள் பற்றிய செய்திகள், பொன்மொழிகள், காலை வணக்கங்கள் என பல்வேறு முக்கிய தகவல்கள் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

பயன்படுத்திப்பாருங்கள்...
உங்கள் கருத்துக்களை
தெரிவியுங்கள்...

Www.indhru.in











இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
14

-கவிஞரைப்பற்றி கவிஞர்கள்



முத்தக் கவிகளின் வித்தகர்...
மூத்த கவிகளின் சொத்தவர்...
வருணனைகளை கைது செய்து...
கற்பனைகளை விடுதலை
செய்பவர்!

சிந்தனை மூச்சடக்கி
கவிச்சொற்களை முத்து எடுப்பவர்...
காலத்தினால் அழியாத கவிதை
துளிகளை தத்து எடுப்பவர்!

சொற்களால் தீட்டுவார் சித்திரம்!
கவிச் சொந்தங்களில் இவர்ஒரு
விசித்திரம்!
காதலுக்கு வகுப்பார் புது
இலக்கணம்!
கடுகளவும் இவரிடம் இல்லையே
தலைக்கனம்!

சொல்லெனும் தேனைத் தேடும்
வண்ணத்துப்பூச்சி!
காதலில் இவர் மூழ்கி எழுந்திட
வெகு நாட்களாச்சி!

கவிகளால் உலகத்தை ஆளுவார்!
நட்புக்களின் அன்புக்கு மட்டுமே
வீழுவார்!

காலத்தினால் அழியாதது இவரது
கவிதைகள்!
காலத்திற்கும் முளைத்து நிற்கும்
இவரது கவி விதைகள்!

வர்ணனைகளை தேடி வீசுவார்
வலை!
வானவரும் வைக்க முடியாது
இவர் கவிதைக்கு விலை!

உணர்வுகளை கவிதை ஓவியம்
ஆக் கும் கவியே!
புவியே எப்போதாவது தான்
பிரசவிக்கும் இது போன்ற
*கவியை!

நட்புடன்
தே. ராஜாசிங்
ஜெயக் குமார்

தூய்மையான காதல்
நிகழ்த்தும்
அற்புதத்தை காதல்
ரசம் சொட்டச்
சொட்ட கவிதையாக வடிக்கும்
எழுத்தாற்றல் கொண்ட இளமைக்
கவிஞர் முத்து ஆனந்த் அவர்கள்
இன்றும் என்றும் ஆச்சரியத்தை
அளிக்கும் ஆரவாரக் கவிஞரே!

கிணத்துக்கடவு ரவி
கோயமுத்தூர்

சிறைத்துறையில் நிறைவாழ்வு
கண்டவர்!

பத்திரிக்கை உலக காதல்
கவியரசர் மென்மேலும் வெற்றி
படைப்புகளை அளித்து மக்களின்
அன்போடும் ஆதரவோடும்
வெற்றிக் கொடி பறக்க விட
இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

வயதை வென்ற வசீகரம்!
படைப்புகள் பத்திரிகையில்
பிரசுரமானால் அனைவரையும்
மகிழ்விக்கும் சொல்வன்மை
கொண்டவர் முத்து ஆனந்த்!

உள்ளொன்று வைத்துப்
புறமொன்று பேசாத கள்ளம்
கபடமற்ற நெஞ்சம் கொண்டவர்
முத்து ஆனந்த் சார் இன்று போல்
என்றும் வாழ்க வளமுடன் வளர்க
நலத்துடன்!

இன்று! போல

இன்னும் பல இதழ்களில்
முத்திரை பதிக்க வாழ்த்துக்கள்!

-- ச.ஜான்ரவி,
கோவில்பட்டி.
தூத்துக்குடி மாவட்டம்

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
15

முகச்சுருக்கத்தின்ரேகைகள் சொல்லுதம்மா...
உனது அனுபவப் பாடத்தையே!

தண்டட்டியோ தாத்தாவின் காதல்
கதையைப் பாடியே...உனது காதுகளில்
ஆடுதம்மா!

வீடு பேறு பெற்று கழனி காத்து
பாரம்பரியம் போற்றி வாழும் தாயே...
நான் கண்ட முதல் அழகியும் நீயே!





கோவை கவி புவனா



தமிழா நீ தாய்த் தமிழை தாங்கு

புற்றீசலாய் நித்தமும்
முளைக்கின்ற
பள்ளிகளின் பெரும் பங்கோ
அந்நிய மொழியின் திணிப்பு
அடாவடி தமிழ்மொழி தவிர்ப்பு!

கைப்பேசியின் அழகிய அழைப்பை
கன்னித் தமிழில் வணக்கம்
என்றே சொல்லி துவங்கி
எழில் தமிழை வளர்த்திடு!

பிறப்பு தொட்டு இறப்பு வரை
பெயரே நம் அடையாளம்!
அழகிய பெயரோ இருந்திட சிறப்பு
அன்னை தமிழ் மொழியிலே!

உற்றார் உறவுகளை நாம்
உளமார அழைத்திடல் எழிலே!
உன்னத தமிழில் இருந்திடல்
உள்ளத்தில் களிப்பை உரமாக்குமே!

பணத்தின் மதிப்பைக் குழந்தைகள்
பசுமைத் தமிழிலும் சொல்லி
பழகிடல் நமக்கும் நம்
பாரம்பரிய தமிழுக்கும் பாலமே!

வனப்பான கன்னித் தமிழை
வாயார பேசிடு நீயே!
வாழையடி வாழையாய்
நித்தமும்
வளருமே நம் தாய்த்தமிழே!

பா.கலைமகள், விழுப்புரம்.

புத்தாண்டு கொண்டாட்டத்தை
எப்போதும் கொண்டாடுது
பூக்கள் மட்டும்.



ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம்

நான் பேசுகிறேன்....

வணக்கம்

ஆ முத்தய்யன் என்கிற முத்து ஆனந்த்.

பெயர்:- முத்து ஆனந்த் என்கிற முத்தய்யன்.

இயற்பெயர்:- ஆ முத்தய்யன்

புனை பெயர்: முத்து ஆனந்த்.

ஆ. முத்தய்யன் என்ற என் பெயர் என் அப்பா இலக்கிய ஆர்வலர் திரு தெ. ஆனந்தன் அவர்கள் சூட்டியது இந்தப் பெயரின் சிறப்பு. இந்தப் பெயர் இலக்கியச் செம்மல் மு. வரதராசன் ஐயா அவர்களின் 'மலர்விழி' என்னும் நாவலின் 'கதாநாயகன்' பெயர். மு வ அவர்களின் மீதுள்ள அளவு கடந்த பற்றினால் என் அப்பா அந்தப் பெயரை எனக்குச் சூட்டினார்.

முத்து ஆனந்த் என்ற பெயரை எனக்குப் புகழ் பெற்ற எழுத்தாளர் படுதலம் சுகுமாரன் அவர்கள் சூட்டினார்.

நான் படித்தது வேலூர் ஊரிஸ் கல்லூரியில் பி ஏ இலக்கியம் உடன் பிறந்தோர் 2 தம்பிகள் 2 தங்கைகள் மனைவி பெயர் சத்யபாமா என்கிற ராஜலட்சுமி மகள் பெயர் இளவரசி.

இலக்கியப் பணி 30 வருடங்களுக்கும் மேலாக.

முதல் கவிதைகள் சூப்பர் நாவல் இதழில். முதல் ஒரு பக்கக் கதை பாக்கெட் நாவல் இதழில். முதல் வாசகர் கடிதம் தேவி வார இதழில். முதல் கேள்வி பதில் துக்ளக் இதழில். முதல் (5) ஜோக்ஸ் கண்மணி மாத இதழில். நான் எழுதத் தொடங்கிய போது என் வயது 13.



நான் 18 வயதில் தொடங்கி இது வரை 52 முறை இரத்த தானம் செய்திருக்கிறேன். என்னுடைய இரத்தப் பிரிவு ஓ+ பாசிட்டிவ். ஆகவே அடிக்கடி என்னால் தேவையான வர்களுக்கு இரத்தம் கொடுக்க முடிந்தது.

கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கும்போது உடல் தானம் எழுதி வைத்தேன்.

காதல் கவிதைகள் நிறைய எழுதுவதற்காகவும் அனைவரையும் மனதார வாழ்த்துவதற்காகவும் 'நிறைய பட்டங்களை' பல அமைப்புகளின் வழியாகவும் வாசகர்களின் வழியாகவும் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதில் எனக்கு மிகவும் பிடித்த பட்டங்கள் 'காதல் முத்து' 'காதல் கவியரசன்' 'வாழ்த்து மன்னர்' 'காதல் பாரி' இப்படி சில.

காதல் வெள்ளி கவிதைகளைப் பாராட்டி

நான் பேசுகிறேன்....



திருவண்ணாமலை திருமிகு ந சண்முகம் அவர் அங்கம் வகிக்கும் அமைப்புகள் வழியாக ஒரு முறை 'கவிமாமணி' பட்டமும் மற்றொரு முறை 'தமிழன்னை விருது'ம் வழங்கினார். இந்தப் பட்டங்கள் எனக்கு வாழ்நாள் வரம்.

இன்று வரை நான் செயல் படுத்தும் விதமாக நான் கடைபிடிக்கும் விஷயம் அன்பளிப்பு வழங்கும் பத்திரிகைகளில் தொடங்கி இன்றைய மின்னிதழ்கள் வரை தொடர்ந்து எல்லா இதழ்களிலும் எழுதுவது.

தி கிரேட் நாவல் என்னும் ஒரு மாத இதழில் ஒரு முறை 32 கவிதைகள் ஒரே இதழிலும் மற்றொரு முறை அதே இதழில் 18 கவிதைகளும் பிரசுரமானது வாழ்க்கையில் எழுத்துத் துறையில் எனக்கு மறக்க முடியாத ஒரு அனுபவம்.

9ம் வகுப்புப் படிக்கும் போது வகுப்பில் ஆசிரியர் வருவது தெரியாமல் கவிதை எழுதிக் கொண்டிருக்கப் பக்கத்திலிருந்த நண்பன் ஆசிரியரிடம் மாட்டி விட்டு விட்டான். வாங்கிப் படித்த ஆசிரியர் பதிலேதும் சொல்லாமல் என்னை ஆசிரியர்கள் அறைக்கு வந்து பார்க்கச் சொல்லிச் சென்று விட்டார்.

பிறகு நான் அவரைப் பார்க்க வாழ்த்தி அறிவுரை சொல்லிப் படிப்புதான் உன் முதல் வாழ்க்கை அதைத் தொடர்ந்தே மற்ற திறமைகள் இருக்க வேண்டும் என்று அறிவுரை சொல்லிப் புரிய வைத்தார்.

பள்ளிப் பருவத்திலேயே எழுதத் தொடங்கியது அளவற்ற ஆனந்தம். அப்பொழுதிலிருந்தே கொஞ்சம் கொஞ்சமாக எழுத ஆரம்பித்து 'வெள்ளி விழா' ஆண்டைத் தாண்டியாகி விட்டது.

தொடரும்....

நான் மிகப் பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்பும் ஓர் அழகிய தகவல்.

அப்பா ஆனந்தன் அம்மா வத்சலா என் பெயர் ஆ முத்தய்யன் இந்தப் பெயர் அப்பா சூட்டியது. இந்தப் பெயரின் சிறப்பு இந்தப் பெயர் மு வரதராசன் அவர்களின் நாவலான மலர்விழி நாவலின் கதாநாயகனின் பெயர்.

முதல் தம்பியின் பெயர் ஆ மதியழகன் பேரறிஞர் சி என் அண்ணாதுரை அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்காக வேலூருக்கு வந்திருந்த போது அவர் சூட்டிய பெயர்.

முதல் தங்கையின் பெயர் ஆ ரேணுகா என் அம்மாவின் பிறந்த ஊரான படைவீடு என்கிற படவேடு கிராமத்திலுள்ள ரேணுகா அம்மனின் பெயர் இந்தப் பெயரை என் அம்மா முதல் தங்கைக்கு வைத்தார்.

இரண்டாவது தங்கையின் பெயர் ஆ அன்புமணி. இந்தப் பெயர் ஈ வே ரா பெரியார் உடல் நலக் குறைவின் காரணமாக வேலூர்

நான் பேசுகிறேன்....



கிறித்தவ மருத்துவக் கல்லூரியில் (சி எம் சி) அனுமதிக்கப் பட்டிருந்த போது அவரால் சூட்டப்பட்ட பெயர்.

இரண்டாவது தம்பியின் பெயர் ஆ மதிவாணன் இந்தப் பெயர் கலைஞர் மு கருணாநிதி அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்காக வேலூர் வந்திருந்த போது அவரால் சூட்டப்பட்டது.

இப்படி என் குடும்பத்தில் உள்ள என் உடன் பிறப்புகளின் பெயர் தனிச் சிறப்புக்குரியது என்பதைக் கூறிக் கொள்வதில் மிகப் பெருமையுறுகிறேன்.

படிக்கும் காலத்திலேயே என்னுடைய 'காதல் கவிதைகள்' நிறைய இதழ்களில் பிரசுரமானது என்ற மகிழ்ச்சியையும் தாண்டி வேறொரு சிறப்பும் உள்ளது. அந்தக் காதல் கவிதைகளை நிறைய பேர் சுட்டும் திருடியும் களவாடியும் காப்பியடித்தும் தங்கள் காதலுக்குப் பயன்படுத்தியுள்ளனர் அதில் சிலருடைய காதல் தோற்றிருந்தாலும் பல பேருடைய காதல் நிறைவேறிப் பல ஜோடிகள் திருமணமும் செய்து கொண்டுள்ளனர். இது எனக்கு என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு தனி மகிழ்ச்சி.

பத்திரிகைகளில் படைப்புகள் சரியாகப் பிரசுரமாகாமல் இருந்த ஒரு சூழ்நிலையில் வேலூரில் உள்ள என் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவரான திரு வெ இ ராம்குமார் அவர்கள் சுமார் 30 பேர் அங்கம் வகித்த ஓர் எழுத்தாளர் குழுவில் என்னை இணைத்தார். அந்தக் குழுவின் அமைப்பாளர்கள் திரு வைகை ஆறுமுகம், திரு திருமயம் பெ பாண்டியன் அவர்கள். அந்தக் குழு தற்போது 200 உறுப்பினர்களுடன் செயல்படுகிறது. அந்தக் குழுவின் ஆரம்பத்தில் தற்காலிகப் பெயர்கள் சூட்டி மகிழ்ந்த நிலையில் நிறைய நண்பர்கள் வெவ்வேறு பெயர்களைப் பரிந்துரை செய்தனர். அப்பொழுது நான் எழுதியிருந்த சில பெயர்களில் ஒன்றான 'தமிழக எழுத்தாளர்கள் குழுமம்' என்ற பெயரை நண்பர்கள் திரு வைகை ஆறுமுகம் மற்றும் திரு திருமயம் பாண்டியன் அவர்களும் தேர்ந்தெடுத்தனர். இது எனக்கு மறக்க முடியாத மகிழ்ச்சியான தருணம்.

குழுவில் நண்பர் இ ராம்குமார் பரிந்துரை செய்ய அமைப்பாளர்களின் அனுமதியுடன் 'காதல் வெள்ளி' என்ற தலைப்பில் வெள்ளிக்கிழமை தோறும் 10 காதல் கவிதைகளைப் பதிவிட்டு வந்தேன். ஆரம்பத்தில் வரவேற்பு இல்லையென்றாலும் நாளாக நாளாக 'காதல் வெள்ளி'க் கவிதைகளுக்குப் பாராட்டுகளும் விமர்சனங்களும் வாழ்த்துகளும் தொடர்ந்து வரத் தொடங்கியது. பிறகு நண்பர்களின் தொடர் ஆதரவால் செப்டம்பர் 2025 முதல் வாரத்தில் 'காதல் வெள்ளி' 7ம்

நான் பேசுகிறேன்....



ஆண்டைத் தொடர்ந்து 8ம் ஆண்டில் அடி எடுத்து வைத்தது.

8ம் ஆண்டில் தொடர வாய்ப்பளித்தமைக்காக திரு திருமயம் பாண்டியன் அவர்களுக்கும் திரு வைகை ஆறுமுகம் அவர்களுக்கும் திரு இராம்குமார் அவர்களுக்கும் என் மகிழ்ச்சியான நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வாய்ப்பினைத் தொடர்ந்து சில வருடங்களுக்கு முன்பு திரு நத்தம் எஸ் சுரேஷ் பாபு அவர்கள் அவருடைய 'தேன்சிட்டு' மாத இதழில் எனக்குத் தொடர்ந்து காதல் கவிதைகளை மாதந்தோறும் எழுத வாய்ப்பளித்தார். இந்தக் கவிதைகளை ஒரு 'பெண்' ஆண்களுக்காக எழுதினால் எப்படி இருக்குமோ என்று கற்பனை செய்து மாதந்தோறும் மூன்று கவிதைகளை ஒரு வருடம் 'தொடராக' எழுதினேன். கடைசி வரை தொடர்ந்து 'சஸ்பென்ஸ்' உடையாமல் எழுதியதால் இந்தக் கவிதைகளுக்கும் நிறைய வாழ்த்துகளும் பாராட்டுகளும் கிடைத்தது.

பட்டன் போன், ஆண்ட்ராய்டு போன் என செல்போன்கள் வருவதற்கு முன்பாகக் கடிதம் மற்றும் தொலைபேசி வழியாக எனக்கு நிறைய பேனா நண்பர்கள் இருந்தார்கள். தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களில் மட்டுமல்லாது வெளி மாநிலங்களிலும் எனக்கு நண்பர்கள் இருந்தார்கள்.

அந்த யோசனையின் காரணமாக 'கையெழுத்துப் பிரதி' ஒன்று தொடங்கினேன். அந்த இதழின் பெயர் 'ரோஜா'.

அந்த 'ரோஜா' இதழ் ஓர் 'இன்லாண்ட்' லெட்டரில் எழுதி அதை அப்படியே பிரதி எடுத்து நண்பர்களுக்கு அனுப்புவேன்.

அந்த ரோஜா (உள் நாட்டுக் கடித) இதழில் குட்டிக் கவிதைகள், குட்டிக் கதைகள், பொன் மொழிகள், விடுகதைகள், பெரிய கவிதைகள், ஹைக்கூ கவிதைகள், தத்துவங்கள், தொடர்கதை, போட்டிகள், கேள்வி பதில் என அனைத்தையும் வழங்கினேன். கேள்வி பதில் பகுதிக்குக் 'குல்கந்து பதில்கள்' எனத் தலைப்பிட்டேன். தொடர் கதையாக 'க்ரைம் கதை'யை நானே எழுதினேன். நண்பர்களிடமிருந்து எனக்குப் பேராதரவும் வாழ்த்துகளும் பாராட்டுகளும் கிடைத்தது. ஆனால் நேரமின்மை காரணமாக 'ரோஜா' இதழை என்னால் தொடர்ந்து நடத்த இயலவில்லை.

1. இளவரசி 2. பூங்குழலி 3. சங்கமித்ரா 4. சக்தி 5. கவிப்ரியா 6. ரோஜா 7. சிண்ட்ரெல்லா 8. மதுமதி 9. ஏஞ்சல் 10. அலெக்சாண்டர் 11. தென்றல் 12. தேவதை 13. முத்து 14. ஆனந்த் 15. சத்யா முத்து ஆனந்த் 16. முத்து ஆனந்த் என்ற 16 பெயர்களில் நான் எழுதி

நான் பேசுகிறேன்....



வந்தாலும் நண்பர்களுக்குத் தெரிந்த பெயர் முத்து ஆனந்த் மட்டுமே.

கோகுலம் கதிர் இதழ் தொடர்ந்து நடத்திய காதல் கவிதைப் போட்டியில் 2வது பரிசாக 25 செண்ட் பாட்டில்கள் கிடைத்தது. இதன் மதிப்பு 1500 ரூபாய். இதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் பரிசாக என ஆறு கவிதைகளுக்கு ஆறு சுவர்க் கடிகாரங்கள் பரிசாகக் கிடைத்தது.

இதய நிலா மற்றும் மேகலா இதழ்களில் பிரஷர் குக்கர் பரிசாகக் கிடைத்தது.

திரு மனோகரன் அவர்கள் நடத்திய 'பெண்மணி' இதழுக்கு எழுத்தாளர் அனுராதா ரமணன் ஆசிரியராக இருந்தார் அந்தப் பெண்மணி இதழில் ஜனவரி 30 ஆன என் திருமணம் நடந்த அன்றே பட்டுப்புடவை பரிசாகக் கிடைத்தது. அது மட்டுமல்லாது கண்மணி இதழ் மாத இதழாக இருந்த போது அதில் பல முறை குலுக்கல்களில் பட்டுச்சேலைகள் பரிசாக விழுந்திருக்கிறது.

விவேக் பப்ளிகேஷன்ஸ் இதழான 'அன்பு விஜயகாந்த்' இதழ் மூலம் 'கேப்டன் விஜயகாந்த்' அவர்களைச் சந்தித்து உரையாடி அவருடன் விருந்துண்ணவும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது கே எஸ் கோபாலகிருஷ்ணன் அவர்களின் 'காவியத் தலைவன்' திரைப்படத்தில் விஜய்காந்த் நடித்துக் கொண்டிருந்தார். மீண்டும் 'அன்பு விஜய் காந்த்' இதழ் மூலமாக ஏ வி எம் ஸ்டுடியோவில் பாரதிராஜா அவர்களின் 'தமிழ்ச்செல்வன்' படப்பிடிப்பில் 'புரட்சிக் கலைஞர் விஜய்காந்த்' அவர்களைச் சந்தித்து உரையாட வாய்ப்புக் கிடைத்தது.

தினகரன் நாளிதழில் 'வெள்ளித்திரை வண்ணத்திரை'யைத் தயாரித்து வழங்கும் எங்கள் வேலூர் மாவட்ட மண்ணின் மைந்தர் தேவதேவன் என்கிற தேவராஜ் அவர்களின் மூலமாக லேடி சூப்பர்ஸ்டார் விஜயசாந்தி, வில்லா தி வில்லன் ஆனந்த ராஜ், அழகுப் பதுமை தேவயானி, ஈரமான ரோஜாவே அழகு மோகினி என சிலரைச் சந்தித்து உரையாடிப் பேட்டி எடுத்துப் பிரசுரமாகும் வாய்ப்புக் கிடைத்ததுடன் அதற்குரிய பரிசுத் தொகைகளும் கிடைத்தது.

மனோகரன் அவர்கள் நடத்திய 'பிலிமாலயா' இதழ் மூலம் 'வீட்டைப் பாரு நாட்டைப் பாரு' திரைப்படத்தின் படப்பிடிப்பில் 'திரையுலக மார்க்கண்டேயன் சிவகுமார்' அவர்களுடன் உரையாடி பேட்டி எடுக்கும் வாய்ப்புக் கிடைத்தது. விவேக் பப்ளிகேஷன்ஸின் புதிய இதழான 'சூப்பர் சினிமா' மூலமாகப் படுதலம் சுகுமாரன் அவர்களுடன் நானும் சேர்ந்து அருண் விஜயகுமார் அவர்களைப் பேட்டி கண்டோம்.

கொரோனா காலத்திற்குச் சற்று முன்பாக மறைந்த பன்முகத் திலகம் எஸ் எஸ் பூங்கதிர் அவர்களின் குழுவிலுள்ள

நான் பேசுகிறேன்....



கோயமுத்தூர் கவிதாயினி கோவைக்கவி புவனா அவர்கள் எனக்கு அறிமுகமானார். அவர் பழகிய சில நாட்களுக்குள் 'ரேடியோ ஜாக்கி'யாக அன்பு வானொலியில் பொறுப்பு வகித்தார். அவர் அளித்த வாய்ப்பு என் கவித் திறமையை மேலும் புகழ் பெறச் செய்தது. கோவைக்கவி புவனா அவர்களின் மூலமாக எனக்குப் பாராட்டுகளும் ஆதரவும் கிடைத்ததுடன் நிறைய பட்டங்களும் கிடைத்தது. பன்முகத்திறனாளியாகவும் வாய்ப்புக் கிடைத்தது.

எழுத்துலகில் என் திறமையை வளர்த்துக் கொள்ள எண்ணற்ற நண்பர்கள் ஆதரவளித்தனர். அதில் பேனா நண்பர்களே 200 பேருக்கு மேல் இருந்தார்கள்.

அதில் குறிப்பிடத் தக்கவர்கள்.

பெரம்பூர் பா உதயகண்ணன் ஏரல் எஸ் யோகலிங்கம் குட்டி மு வெங்கடேசன் பேரணாம்பட்டு ர.ஃபி வண்ணை கணேசன் தோட்டப்பாளையம் கே வெங்கடேசன் பெசண்ட் நகர் ஆர் ஸ்ரீ நிவாஸ் பிரபு திருவண்ணாமலை எல் பாபு கோயமுத்தூர் எஸ் சத்யபாமா திண்டுக்கல் கே பி எஸ் ரமணி பிரபாகர் விழுப்புரம் கண்டம்பாக்கம் ஏ கே சிவஞானம் வேளச்சேரி சு கணேஷ் குமார் வேலூர் ஏ எஸ் செல்வகுமார் கழனிவாசல் மா காளிதாசன் சேலம் குகை மா புகழேந்தி வேலூர் வெ இராம்குமார் வேலூர் மலர்மதி கோபிசெட்டிபாளையம் ஜி கே சுந்தர மூர்த்தி திருச்சி தி மா தமிழழகன் சேலம் அன்னதானப்பட்டி எம் ஜி கன்னியப்பன் கோவைக்கவி புவனா மற்றும் தமிழக எழுத்தாளர் குழுவிலுள்ள நிறைய நண்பர்கள் என இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

மின்னிதழ்களும் என் திறமைக்கு நிறைய வாய்ப்பளித்து மகுடம் சூட்டின. எனக்கு மிகவும் பிடித்த மின்னிதழ்கள் தேன்சிட்டு அனிச்சம் மணி மகுடம் இன்று அமுதம் பனித்துளி தமிழ்நாடு இ செய்தித்தாள்.

இந்த அனைத்து இதழ்களிலும் என் கவிதைகளும் கதைகளும் கட்டுரைகளும் டயலாக்குகளும் பிரசுரமாகியுள்ளன.

இந்த ஏகலைவனுக்கு எழுத்துலக ஆசானாக உயர்திரு பட்டுக்கோட்டை பிரபாகர் ஐயா அவர்களும் கவியுலக ஆசானாக தபூ சங்கர் அவர்களும் வழி நடத்துகிறார்கள்.

என்னுடைய விருப்பங்கள்:-

எப்பொழுதும் மனித நேயத்துடனிருப்பது.

எப்பொழுதும் எழுதிக் கொண்டிருப்பது.

நான் பேசுகிறேன்....



மற்றவர்களின் உணர்வுகளை மதிப்பது.

மற்றவர்களுக்கு உதவி செய்ய இயலாவிட்டாலும் தொந்தரவு செய்யாமலிருப்பது.

பெண்களை எப்பொழுதும் உயர்ந்த நிலையில் வைத்திருப்பது.

எதற்கும் எவரையும் கட்டாயப்படுத்தாமலிருப்பது.

குழந்தைகளின் எண்ணங்களைப் புரிந்து கொள்வது.

அன்னதானம் குருதி தானம் கண் தானம் உடல் தானம் இவற்றை நிறைய பேர்களுக்குப் புரிய வைத்துச் செயல்படுத்துவது.

என்னுடைய ஒரே வேண்டுதல் -


இருந்தாலும்
மறைந்தாலும்
பேர் சொல்ல
வேண்டும்
இவர் போல
யாரென்று
ஊர் சொல்ல
வேண்டும்.

என இறுதி வரை உண்மையாக நேர்மையாக வாழ்வது.

தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா.

ப்ரியங்களுடன்

முத்து ஆனந்த்.



"பாராட்டு மடல்"

உயிர்களின் இயக்கம் காதலால்
உயிர்கள் பிறப்பு காதலால்
உலக இயக்கம் காதலால்
காதல் பயிர் வளர்க்கும் கீர்த்தி முத்தம்
முத்தத்தை மௌனத்தமாகக் குத்தூசை எடுத்த
முத்து ஆனந்துக்கு மனமார்ந்த பாராட்டுகள்!
முத்து வினையாட்டு மேலும் தொடர
சித்தம் நிறைந்த நல்வாழ்த்துகள்!

அன்புடன்,
கதிர்மதியன்
15/12/2025

கவிஞர் கதிர்மதியன், தலைவர்
பைந்தமிழ்ப் பூங்கா
நுகும்பல் & அஞ்சல் - 603313
செங்கல்பட்டு மாவட்டம்
பேசி: 97912 30063

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
23

மின்னல் கதைகள்



திருச்சிற்றம்பலம் சுரேஷ்
9092142678



அதே.. பெண்

...

அறுபதாம் திருமணம். உப்பு & சப்பு இல்லாம நடந்து முடிந்தது. அதே பெண்.. அதே மாப்பிள்ளை.

இரவு பயம்

...

இரவு வந்தால் பயந்து பயந்து வாழ்ந்த கவிதா. மகன் பொறுத்திய இன்வெர்ட்டர் மூலமாக கரண்ட் கட் ஆனாலும் பயம் இல்லாமல் வாழத் தொடங்கினால். இரவு நேர மின்நிறுத்ததிலும்.

சிறைச்சாலை

...

அடிக்கடி மாமியார் வீட்டுக்கு தனியாக சென்று வந்தான் ரவுடி ராகவன் சிறைச்சாலைக்கு.

புடவை

..

அம்மா பாசம் கொண்ட அவன். அம்மா மறைவுக்கு பின் அவர்களின் புடவையை போர்வையாக போர்த்தி படுத்துக்கொண்டான். அம்மா நினைவாக...

மகனே

..

உனக்காகதான் வாழ்ந்தேன். சீக்கிரம்மாக.. என்னை உன்னோடு அழைத்துக்கொள் கூறினாள் அவன் மறைவுக்கு பின்.

பலூன்

..

காற்றை நிரப்பிக்கொண்டு தெருத் தெருவாக விற்க சென்றார். பலூன் வியாபாரி அருள். குழந்தைக்காக.

போஸ்டர்

ஊரில் நடந்த கட்டிட திறப்பு விழாவில். ஊரின் கவுன்சிலர் முருகன் பொது மக்களிடம் பேசினார்"தயவுசெய்து யாரும் கட்டிடத்தில் எந்த வித போஸ்டர்"ஒட்டக்கூடாது என்று.

விளையாட்டு

...

ஒடி.. பிடித்து நண்பர்களுடன் விளையாடிய மகள். இன்று கைப்பேசி வழியாக கேம் விளையாடுவதை கண்டு வருத்தம் அடைந்தார் அப்பா.

ஆட்சியில்

...

தொகுதியிலும்.. ஆட்சியிலும் பங்கு கேட்ட.. கூட்டணி தலைவரிடம் உறுதியாக கூறினார். ஒரு தொகுதியில்..கூட தோற்க்காமல் வெற்றி பெற்று வாங்க. ஆட்சியில் பங்கு தருகிறேன் கூறினார்... அரசியல் தலைவர் முரளி.

மூர்த்தி கவிதைகள்

ம.மூர்த்தி
புல்லரம்பாக்கம்
9600886441



நிலாவைத் தின்ற பிறகும்
மேகக் கூட்டம்
பசியாகவே அலையுது

ஆதரவு கேட்டு
யாரிடமும்
அடைக்கலம்
புகுவதில்லை
இயற்கை

மரங்களை வெட்டும்
மனிதனே மழை கேட்டு
யாகம் செய்வதுதான்
வியப்பு

ஒய்யாரமாக ஒப்பனை
போட்டாலும்
இளமையை திருடாமல்
விடுவதில்லை காலம்

அவளைக் கண்ட பிறகு
இருக்கிறேன் நான்
அவளாக மட்டுமே.

புத்தாண்டே வருக

சுடர் பருதி வெளிச்சம் போல
அனைவரின் வாழ்விலும்
மகிழ்ச்சி நிறையட்டும்
சுகந்த வாசம் போல
எங்கும் சந்தோஷ மணம்
பரவட்டும்
ஒட்டு மொத்த அகிலமும்
அன்பெனும் பிடியில்
சிறைபடட்டும்
நம் சிந்தனைகள் எப்போதும்
சமத்துவக் கடலில்
நீந்தட்டும்
ஏற்றத்தாழ்வின்றி எல்லோர்க்கும்
எல்லாம் கிடைக்கட்டும்
விஞ்ஞானத்தோடு சேர்ந்து
மெய்ஞானமும் தழைக்கட்டும்
பொலிவுடன் புத்தாண்டே நீ
வருக வருக வருக
நிறைவுடனே நலத்தையும்
வளத்தையும்
தருக தருக தருக...

முயற்சிக்கத் தெரிந்தவனுக்கு
ஒவ்வொரு நாளும்
புத்தாண்டு பிறப்புதான்

புல்வெளி மீது பனித்துளி
போல நாட்களின் மீது
உழைப்பைப் போர்த்து

குழந்தையின் குதூகலம் ஒவ்வொரு
நாளையும் புத்தாண்டாக
மாற்றிவிடுகிறது

அவள் புன்னகைக்கும்
போதெல்லாம் எனக்கு மட்டும்
புத்தாண்டு பிறக்குது

புத்தாண்டு கொண்டாட்டத்தை
எப்போதும் கொண்டாடுது
பூக்கள் மட்டும்.

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
25

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்

நான் எழுத்தாளர் வேலூர் எஸ் ஸ்ரீதுரை. காஞ்சிபுரத்திலிருந்து பேசுகிறேன்.

வேலூரைச் சேர்ந்த நண்பர் கவிஞர் முத்து ஆனந்த் அவர்கள் நீண்ட காலமாக எழுத்துலகில் ஓய்வின்றி செயலாற்றி வருபவர். இவர் ஏராளமான கவிதைகள் எழுதியிருக்கிறார். இவர் 30 வருடங்களுக்கும் மேலாக எழுதி வருகின்றார். பெரும்பாலும் இவர் 'காதல் கவிதைகளை இளமை சொட்டச் சொட்ட எழுதுவது' வழக்கம். பெரிய சிறுகதைகள், சிறிய சிறுகதைகள், பரவலான ஹைக்கூக்கள், டயலாக்குகள் என பல எழுதினாலும் எழுத்துலகில் ஒரு 'தனிக்காட்டு ராஜா'வாக விளங்குபவர். நண்பர் முத்து ஆனந்த் மென்மேலும் சிறந்த சாதனைகளைப் படைத்து இலக்கிய உலகில் வெற்றிக் கொடி நாட்ட வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்.

வேலூர் எஸ் ஸ்ரீதுரை
காஞ்சிபுரம்.




நண்பர், எழுத்தாளர் வேலூர் திரு. முத்துஆனந்த் சார் காதல் கவிதைகள் எழுதுவதில் ஜீனியஸ். எப்படித்தான் இவருக்கு காதல் கவிதைகள் இப்படி அருவியாகக் கொட்டுகிறதோ என்று நானும், நண்பர்களும் வியந்ததுண்டு. காதலிக்காதவர்களையும் காதலிக்க வைத்துவிடும் முத்துஆனந்த் சாரின் காதல் கவிதைகள்.

நான் பழகிய வரையில்... முத்துஆனந்த் சார் அனைவருக்கும் மிகுந்த மரியாதை தந்து பேசக்கூடியவர். உடல் நலனை விசாரிப்பதன் மூலம் நண்பர்களின் மீது மிகுந்த அன்பு கொண்டவர்.

தனது காதல் கவிதைகளைப் போலவே மிகவும் இனிமையாக பேசக்கூடியவர் முத்துஆனந்த் சார்.

-ராம் ஆதிநாராயணன்,
தஞ்சாவூர்.

சினிமாவிலிருந்து அரசியலுக்கு வந்த தலைவர்களெல்லாம் குட்டிக்கதை சொல்லிக்கொண்டிருக்க... தொடர்கதை சொல்ல ஆரம்பித்தார், மெகா சீரியலில் இருந்து அரசியலுக்கு வந்த தலைவர்!



சு.அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்
Mobile: 8526037792

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்

தமிழக எழுத்தாளர்கள் குழுமத்தின் மூலமாக, திருமிகு. முத்து ஆனந்த் அவர்கள் எனக்கு அறிமுகம்.
எங்கள் குழுமத்தின் 9 - ம் சந்திப்பு நிகழ்வு பொறையாரில் நடைபெற்ற பொழுதுதான் நேரில் சந்திக்கும் வாய்ப்பு நல்கியது. அந்த சந்திப்பில், யாவரையும் புன்னகையோடு கைகொடுத்து வரவேற்றார். அந்த நிகழ்வு முதல் 'முத்து ஆனந்த்' ஐயா என்றால் ஐயாவின் புன்னகை தான் என் நினைவுக்கு வரும். நேரில் சந்தித்த பின்னர் தான் தெரிந்தது. இளமை பருவத்தில் இரசித்து படித்த கவிதைகள், வாரந்தோறும் வரும் 'முத்தாரம்' இதழில் எழுதிய கவிஞர் முத்து ஆனந்த் ஐயா தான் என்று தெரிந்தும் மிகுந்த மகிழ்ச்சி. தமிழக எழுத்தாளர்கள் குழுவிலும், வாரந்தோறும் வெள்ளிக்கிழமை காதல் கவிதைகள் எழுதி வரும் கவிதைகள் பல மலர்களை நாடும் தும்பி குடிக்கும் தேன் என்றால் மிகையல்ல! அவ்வளவு சிறப்பான கவிதைகள். தலைப்புகள் மிகச்சிறந்தவைகள். தினமும் புலனத்தில் இனிய வணக்கம் தவறாதா இளைஞர். அவ்வளவு சுறுசுறுப்பான பெரியவர். முத்து ஆனந்த் ஐயாவின் சிறப்பு இன்னொன்று உண்டு.
அனைவருக்கும் தெரிந்தது இளையோருக்குரிய காதல் இளைஞர். ஐயாவோடு நான் சில முறைகள் தான் திறன் பேசி மூலம் பேசியுள்ளேன் என்றாலும், அவரின் 'குழந்தை மனதை' அடையாளம் கண்டு கொண்டேன். இந்த மனம் பலருக்கும் வாய்ப்பதில்லை.

- நூர்சாகிபுரம் க. துள்ளுக்குட்டி.

வெள்ளியை தங்கமாகவும்
வைரமாகவும் ஜொலிக்க வைக்கும்
முத்தே!
மலர்களை மதி நுட்பத்துடன்
ஆராயும் தாவரவியல் நிபுணரே!
அறிவியலோடு காதலை கலந்து
ஆராயும் விஞ்ஞானியே!
உவமையுடனும் புலமையுடனும்
தூறல் போடும் நவீன புலவரே!
காதல் சுவடுகளை பதமாய்
தடம்பதிக்கும் சரித்திர நாயகனே!
ஒப்பீடுகளில் ஒப்பற்ற காதல்
நாயகனே!
என்றும் எங்களை உற்சாகத்தோடும்
குதூகலப்போடும் கலகலப்பாய்
இளமையாய் இருக்க வரம் கொடு
வாத்தியாரே!

பா.து. பிரகாஷ், தஞ்சாவூர்

முத்து ஆனந்த் என்ற பெயரை கேட்டவுடன் என் நினைவில் வருவது அவரது அன்பான பேச்சு தான்...

அதன் பின்னே அவரது "காதல் வெள்ளி" கவிதைகள்...

கஷ்டமான சூழல்களில் எதிர்கொண்ட நிகழ்வுகளை அவர் மனதில் ஒரு ஓரமாக வைத்துவிட்டு- பழகுபவர்களிடம் இயல்பாக பேசக்கூடிய ஒரு நல்ல பண்பாளர்...
என்னிடம் முத்து ஆனந்த் அவர்கள் பழகிய வகையில்... நான் அறிந்த குண நலன்கள் எனக்கு பிடித்தமாகவே இருந்திருக்கிறது...
இனிய நல் வாழ்த்துக்கள்...
அன்புடன்
சங்கர்ஜி... மதுரை

அறிமுகங்கள்...

பாதகச் செயல் புரியும் மானிடர் மா(இடர்)

வழிகாட்டி பலகையிலும்
விளம்பரத்தாள் ஒட்டியே
வியாபாரத்தை கையாளும் -
மானிடர்!

பள்ளிச் செல்லும் பாப்பாவையும்
பணிக்குச் செல்லும் பாவையையும்
பாலியல் கொடுமை செய்யும் -
மானிடர்!

சமூகப் பொருட்களை சேதமாக்கி
சாதிக் கலவர சண்டை ஏற்படுத்தி
சட்ட புறம்பான செயல்செய்யும் -
மானிடர்!

மதி மயக்கும் மதுவையும்
போதை தரும்
போதைப்பொருளையும்
கலங்கம் விளைவிக்கும் கள்ளைக்
குடிக்கும் - மானிடர்!

மருந்தில் கலப்படம் செய்யும்
மாந்தீரிகனும்
கல்வியை வியாபாரமாக்கும்
கயவர்களும்
இலஞ்சத்தை இலட்சியமாக
கொண்ட இலட்சியவாதியும் -
மானிடர்!

பயங்கர வாதத்தை ஏற்படுத்தும்
பாமரனும்
அணுகுண்டு வீசும் அரக்கனும்
கலவரம் உண்டாக்கும் கயவனும் -
மானிடர்!

மதவாதம் உருவாக்கும் மனிதம்
மண்ணில் பிறந்த மா(இடரே)
மறந்தும் புரியாதீர் மா(இடர்)!



பா.கலைமகள்,
விழுப்புரம்.

பெண்மை

முதல் நொடி கண்டோம்
காதல் மலர்ந்தது ..
காதல் கொண்டோம்
திருமணம் ஆனது ..
திருமணத்திற்கு பின்
தம்பதிகளாகி , தாய் தந்தை ஆகி ,
தாத்தா பாட்டி ஆகின்றோம் ..!!
பெண்மை பெண் சேரவில்லை ,
சேர்த்துவிட்டோம் ..
காதல் - வலியை பகிர்ந்து
கொள்ள
திருமணம் - வலியை குறைத்து
கொள்ள
தாய் தந்தை - வலியை வரித்து
கொள்ள
இத்தனையிலும் "வலி"
மறப்பதில்லை , மறைப்பதில்லை
ஏனெனில் , பெண்மை
பெண்ணுல் பதிந்துவிட்டது ..!!



விமல்ராஜ்,
மதுரை



தமிழக எழுத்தாளர்கள் குழுமம் என்ற பெயரில் இயங்கிவரும் வாட்சப் குழுவில் 200-க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் உள்ளனர். இவர்கள் 10வது சந்திப்பாக கடந்த 21.12.2025 அன்று திருப்பூரில் சந்தித்து மகிழ்ந்தனர்.

இவர்கள் அனைவரும் அனைத்து பிரபல இதழ்களில் எழுதி வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

www.indhru.in
2026 ஆம் ஆண்டு
அரசு விடுமுறை தினங்கள்
விபரங்கள் உள்ளன...

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
28

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்



அன்பு வானொலியில் நான் தொகுப்பாளினியாக அன்பு ராகங்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து அளித்து வந்தேன். அப்போது ஒரு நாள் விடாது நிகழ்ச்சியைக் கேட்டு ரசித்து தனது வாழ்த்துகளைக் கவிதைகளாக்கி தொகுத்து வழங்கியவர்
அன்பு ராகங்களின் வாழ்த்து மன்னர் என்றே நான் இவரை அழைப்பேன் எனக்குத் தெரிந்தவரை ஆறு வருட காலங்களாக வார வாரம் காதல் வெள்ளியில் கவிதைகளை அள்ளித்தரும் இவரை நான் காதல் பாரி என்றே வாழ்த்தியுள்ளேன்
ஜனவரி மாத இன்று இதழில் சிறப்பு ஆசிரியராகப் பங்கு பெறும் திரு. முத்து ஆனந்த் அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்



கோவைக்கவி புவனா



காதலின் புதுக்கவிதை நாயகன் முத்து ஆனந்த் சார் எளிமையான வார்த்தைகளில் எதார்த்தமான அற்புத கவிதை எழுதும் காதல் சோலை கவிஞன் கம்பன்!!!
இவருக்காக மட்டுமே வெள்ளி என்ற நாள் துவங்கி இருக்க வேண்டும் என்று எண்ணுகிறோம்.
வெள்ளிக்காதல் கவிதைகள் மற்றும் சிறந்த நகைச்சுவை துணுக்குகள் எழுதி மின்னல் என மிளிரும் அற்புத எழுத்தாளர்.
எங்கள் சம கால அற்புத எழுத்தாளரை மனதார வாழ்த்துகிறோம்

அன்புடன்,
ஜவஹர் பிரேம்குமார்,
பெரியகுளம்.

கவிஞர் முத்து ஆனந்த் அவர்கள் அனைவரிடத்திலும் அன்பு பாராட்டும் நல் நண்பர்...
* காக்கிக்குள் இவ்வளவு காதலா என அதிசயிக்க வைக்கும் காதல் கவிஞர்...
* இவரது வித்தியாசமான காதல் கவிதைக்கு ரசிகர்கள் அதிகம்...
* 45 ஆண்டுகளாக தொய்வின்றி தொடர்ந்து எழுதுவதும், எழுத்தாளர்களோடு தொடர்பில் இருப்பதும் பெரிய அதிசயமே...
* வேலை ஒரு புறம், படைப்புலகம் ஒரு புறம் இவற்றிற்கிடையே சமூக சேவை செய்யும் இவரைப் பார்த்தால் அதிசயமாகத்தான் இருக்கிறது...
* விருதுகள் பல பெற்ற "முத்து" சார் வாழ்வில் எல்லா "ஆனந்தமும்" பெற வாழ்த்துகிறேன்...

சித்தோடு இரா
கமலக்கண்ணன்
ஈரோடு

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
29

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்



தாய்க்காதலன்

தேர்ந்தெடுத்த காரணப்பெயர்
இவருக்கு மட்டும் பொருந்தும்..!

ஆனந்தமாய்
வாரிக்கொடுப்பதில் சலிப்பதில்லை
குருதியையும் காதலையும் ..!

இவரது கையிலிருப்பது
அடிக்கோலில்லை ..
பிறரது வாழ்வையுயர்த்தும்
ஊன்றுகோல் ..!

இவரது எண்ணப்பறவை
எப்போதும் பிறரது நிறைகளை
நேசிக்கிறது..
குறைகளை பூசிக்கிறது ..!

இவர்,கற்பனைகளை
விற்பனை செய்வதில்லை ..!

வெள்ளிக்கிழமையை
விரதமிருக்க வைக்கும்
காதல் அசுரன் ..!

உதிரும் மலரை வலிக்காமல்
உள்ளங்கையில்
பூமித்தாய் தாங்குகிறதே,
அப்படி காதலை தாங்கும்
தாய்க்காதலன் ..!

இவரது வாழ்வும்
வளமும் மங்காது
எந்நாளும் ஒளிவீசட்டும் ..

சி சாமிநாதன்
கோயமுத்தூர்

ஒரு பொது
வாசகராக வார
பத்திரிகைகளை
வாசித்து
கொண்டிருக்கும்போது தொடர்ந்து
கண்ணில் தென்பட்ட பெயர்
முத்து ஆனந்த்.
யார் இவர் என்று காதலியை
தேடும் காதலனாய் தேட
முற்பட்டபோது எழுத்தாளர்கள்
whatsapp குரூப் மூலம் அறிமுகம்
ஆனார்.
காதலிப்பது எப்படி என்பதை விட
அணு அணுவாக காதலிப்பது
எப்படி என்று இவரிடம் தான்
பாடம் படிக்க வேண்டும்.
ஆம் இவர் பார்வையில் பார்க்கும்
பொருள் எல்லாம் காதலியாகவே
தென்படும். வாராவாரம் வெள்ளி
வருகிறதோ இல்லையோ இவரது
காதல் கவிதை துள்ளிவரும்.
கவிதை எழுதபவர் மட்டுமல்ல
இவர் சிறந்த பண்பாளர்,
மனிதநேய மனம் படைத்தவர்.
இவரிடம் நேரில் பேசி பழகிய
காலங்கள் சிறிது தான் என்றாலும்
பல நாள் நண்பனை போல
உரிமையுடன் பேசக்கூடிய
தன்மை பெற்றவர். அந்த நட்பை
கண்டு பல காலம் வியந்து போய்
இருக்கிறேன்.
இவரது ரத்த தானம் போன்ற
பொது நலப் பண்புகளும், மனித
நேயமும் காதல் போல
மென்மேலும் வளர இறைவனை
பிரார்த்திக்கிறேன்.

சிவக்குமார் நடராஜன்
பரங்கிப்பேட்டை

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
30

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்

நான் அங்கம் வகிக்கும் தமிழக எழுத்தாளர்கள் வாட்ஸ்அப் குழுமத்தில் வெள்ளி தள்ளிப் போனாலும் கவிதைகளை அள்ளித் தந்து நெஞ்சினில் பள்ளி கொள்ளச் செய்து இளமைக் கனவுகளுடன் துள்ளிக் குதிக்க வைக்கும் திறமை படைத்தவர் முத்து ஆனந்த் அவர்கள்.

அன்பு, ஆனந்தம், இன்முகம், ஈகை, உரத்த சிந்தனை, ஊக்கம், எழுச்சி, ஏற்புடைமை, ஐயம் இல்லாத பாசம், ஒற்றுமை, ஓங்கிய கற்பனை, ஔவையின் தமிழ்... ஆகியவற்றின் சொந்தக்காரராகிய முத்து ஆனந்த் அவர்களின் நட்பு எனக்கு கிடைத்தது நான் செய்த பாக்கியம்.

லட்சுமி ஆவுடைநாயகம்,
மடிப்பாக்கம்.
அலைபேசி: 9976138215



வணக்கம். முத்து ஆனந்த் அவர்களின் பல கவிதைகள் படித்து இருக்கிறேன். பலவிதமான, நம்மால் எண்ணக்கூட முடியாத விஷயங்களிலும் முத்தம் கவிதைகள் படைக்கும் முத்து ஆனந்த் அவர்களின் திறமை, கற்பனைத்திறன் மிகவும் பாராட்டுக்குரியது முத்தம் என்பதை அழகாக, முத்தம் என்பது இருவரின் காதலைக் காட்டுவது மட்டுமல்ல. அது ரசிக்கக்கூடியது. என்று அனைத்து தரப்பினராலும் முகம் சுழிக்காமல் ரசித்து படிக்கக்கூடிய அளவு இருப்பதே முத்து ஆனந்த் அவர்களின் "முத்தம் கவிதைகள்". இது இவரால் மட்டுமே படைக்கமுடியும். முத்தத்தின் அழகு இவர் கவிதைகள் படைப்பில் தெரியும். "முத்தக் கவிதையின் பிரம்மா" முத்து ஆனந்த் அவர்கள் தான். மேலும் பல ஆயிரம் கவிதைகள் படைத்து பல விருதுகள் பெற நான் மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

கவி. வெற்றி விஜயா
(எ) திண்டிவனம் விஜயலட்சுமி

விண்ணப்பபடிவம்
பூர்த்தி செய்யும் போதெல்லாம்
இதயம் வலித்தது..

"நிரந்தர முகவரி"
வாடகை வீட்டில்
வாழ்பவனுக்கு..!



ஆர்.சுந்தரராஜன்
சிதம்பரம்
செல்: 9994849777

என் வீட்டில் எல்லா வேலை யையும்
என் மனைவிதான் பார்ப்பாள்...

நீ கொடுத்து வெச்சவன்தான்...

அது இல்லைடா எல்லா
வேலையையும் நான் செய்வேன்.
அவள் அருகிலிருந்து
பார்ப்பாள்–னு
சொன்னேன்....



எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
31

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்





வணக்கம். நான் இதுவரை எத்தனையோ கவிஞர்களுடன் பழகியிருக்கிறேன்.அவர்களின் எழுதும் திறன் கண்டும் மகிழ்ந்திருக்கிறேன்.

ஆனால்...நான் பழகிய கவிஞர்களில் திரு.முத்து ஆனந்த் சார் மிகவும் தனித்தன்மை வாய்ந்த கவிஞர் ஆவார்.

நாங்கள் இருவரும் சேர்ந்து பயணிக்கும் தமிழக எழுத்தாளர் எனும் வாட்சாப் குழுமத்தில் காதல் கவிதைகளை எழுதி எங்களை எல்லாம் மகிழ்ச்சி கடலில் ஆழ்த்திக்கொண்டிருப்பவர்.

காதல் கவிதை எழுதுவதிலென்ன இருக்கிறது ஆச்சர்யம் எனும் வினா உங்களுக்குள் எழுவது நியாயமான ஒன்றுதான்.

ஆனால்...அவர் எழுதும் விதம் தெரிந்தால் உங்கள் நெற்றி ஆச்சர்யத்தில் சுருங்கப்போவது நிஜம்.

அந்த குழுவில் அவர் கிட்டத்தட்ட 7 ஆண்டுகள் தொடர்ச்சியாக, அதுவும் வாரா வாரம் வெள்ளிக்கிழமையன்று ,அதுவும் குறைந்த பட்சம் ஐந்து காதல் கவிதைகள் எழுதி அசத்தி வருகிறார். நிச்சயமாய் இன்னேரம் உங்கள் மனம் 7*52*5 என கணக்குப்போட்டுப்பார்த்திருக்கும் என நம்புகிறேன்.

மழை, புயல், வெயல், அமாவாசை, கிருத்திகை இவைகளெல்லாம் கூட கொஞ்சம் அப்படி இப்படி தள்ளி வரும்.

ஆனால்....வாரா வாரம் வெள்ளி வந்தால் க்ளிக்கென்ற சப்தமிட்டபடி இவரின் காதல் கவிதைகள் எங்கள் வாட்சாப் குழுவில் வந்தமரும்.

அந்த கவிதை அவ்வளவு அழகாய் இருக்குமென்றால், அதை அவர் எழுதி பதிவிடும் அழகு...கவிதையின் அழகோடு போட்டிப்போடும்.

கவிதையின் ஒவ்வொரு வார்த்தைக்கும் அருகில் வண்ண வண்ணமாய் குறிகளிட்டு அழகுபடுத்தி பதிவிடுவார். பார்ப்பதற்கே அவ்வளவு அழகாய் இருக்கும்.

ஏதோ கடமைக்கு எழுதினோம் என்றில்லாமல், நேர்த்தியாய் அதை பதிவிடுவதற்கு அவர் மெனக்கிடும் நேரம்...அவருக்குத்தான் தெரியும்.

கவிதைகள் வந்த மாத்திரத்தில் அவரின் கவிதையை ரசித்து ருசித்து படித்து நாங்களெல்லாம் விமர்சனம் எழுதி பதிவிடுவோம்.

மற்றவர்களுக்கு வருடம் தோறும். எங்களுக்கெல்லாம் வெள்ளிக்கிழமை தோறும் தீபாவளி.முத்து ஆனந்த் சாரின் கவிதைகளை படிப்பதால்.

ஒரு சில பேரிடம் மட்டுமே இருக்கும், பல பேரிடம் இல்லாத ஒரு அற்புத குணம் நம் கவிஞரிடம் கொட்டிக்கிடக்கிறது.
அது மற்றவர்களை பாராட்டும் குணம்.நம் படைப்பு அவருக்கு பிடித்துவிட்டால் போதும்.தொலை பேசியில் அழைத்து பாராட்ட தயங்கவே மாட்டார்.

நற்கவிதைகளை படைப்பதோடு, நற்பண்புகளோடு இருக்கும் கவிஞர் முத்து ஆனந்த சாருக்கு எங்களின் வாழ்த்துகளையும்,அவர் எழுதி நிறைய சாதிக்க பாராட்டுகளையும் தெரிவித்து அகமகிழ்கிறோம்.

புதுவண்டி ரவீந்திரன்.

இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
32

–கவிஞரைப்பற்றி கவிஞர்கள்





'இன்று' இதழ்
படித் _தேன்...!

காவியக் கவிஞரின்
'காதல் என்பது'
கவிதையை
சப்தமில்லாமல் திருடி,
இதயத்திற்குள் பூட்டி வைத்து
விட்டேன்...!

நம்பிக்கை நட்சத்திரக் கவிஞரின்

"வருவதும் தெரிவதில்லை
போவதும் தெரிவதில்லை
இன்றைய திரைப்படங்கள்"

படித்து சிரித்தேன்!

300 பக்கங்களில் கூற
வேண்டியதை
3 வரிகளில் முடிக்க
"முத்து ஆனந்தால் மட்டுமே
முடியும்...!!"

அன்னார்க்கு
திருப்புகழின் 6 வது வரிப் பாடலை
அன்புடன் சமர்ப்பணம்
செய்கிறேன்...

"முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண...
என
எந்நாளும் ஓதுவேன்
என்பதைக் கூறித் தற்காலிகமாக
விடை பெறுகிறேன்...

_____

அன்புடன்,
புதூர் பாலா
✆ 85250 82821

'இன்று' சிறப்பான பத்திரிகை!

வேலூர் முத்து ஆனத்த் பன்முக திறமைசாலியான அவரின் தனித்துவமான திறமை இதழ் முழுவதும் முத்தாக பிரகாசித்தது. அவரது கவிதைகள் அனைத்தும் சிறப்பு. அதோடு இன்று இதழில் எல்லா படைப்புகளுமே தரமாக மனதில் நிற்கும்படி இருக்கிறது. பாராட்டுக்குரிய சிறப்பான பத்திரிகையாக திகழ்கிறது இன்று!

–சின்னஞ்சிறுகோபு,
சென்னை–73

காதல் அரசியல்

மெய்யான அரசியல் உண்டென்பதை
ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கு
சொல்லிக் கொண்டே
இருக்க வேண்டி இருக்கிறது
அதிகார அரசியல்,
கும்பல் அரசியல்,
சாதி அரசியல்,
அலுவலக அரசியல்
யாவற்றுக்கும் அப்பால்
நன்மை பயக்கக் கூடிய
அரசியல் ஒன்று உண்டு
என்பதை நிரூபனமாய் காட்டுகிறது
உன் காதல்

ஸ்ரீ நிவாஸ் பிரபு



இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
33

படைப்புகள்

மாங்காய்த் தொக்கு என் மனைவி கிளறியது. நல்லா இருக்கா ?

சூப்பரா இருக்கு தம்பி..உன் மனைவியின் கைப்பக்குவமே தனிதான்...

ஐயோ அக்கா...மாங்காய சீவி நறுக்கி மிக்ஸில போட்டு அரைச்சு செஞ்சது பூராவும் நான். அதைக் கரண்டியால கிளறி உங்கக் கிட்டே தந்திருக்கிறாள் !



எம்.அசோக்ராஜா,

வேலைத்தேடி வந்தவனிடம் வேலை காலி இல்லை போர்டை எழுதச்சொன்ன முதலாளி !

மகனுக்கு புது செருப்பு வாங்கினான் தன் பழைய செருப்பை மறுபடியும் தைத்த தந்தை!

அம்மாகேட்ட பணத்துக்காக தன்குருதியை தானம் செய்த பணத்தை அம்மாவிடம் தந்த மகன்!

பாரதிராஜன் என்கிற
ரங்கராஜன் எஸ். வி.
சென்னை அம்பத்தூரிலிருந்து.

" அவல் வியாபாரி தன் சுயசரிதையை எழுதப்போறாராம் !"

"என்ன தலைப்புல எழுதப் போறாரு ?"

"அவலும் நானும்!"

-oOo-oOo-oOo-oOo-oOo-oOo-

"என்னங்க இது! கடலோர காவல் படை ஆபீஸ் போர்டில் தப்பா "Ghost Guard Office' னு எழுதியிருக்காங்க ?"

"அவங்க ஆபீஸ்ல பேய் நடமாட்டம் இருக்காம் . அதன் அப்படி எழுதியிருக்காங்க !"

-oOo-oOo-oOo-oOo-oOo-oOo-

"சின்ன வயசுல 'பைல்ஸ்' வந்து ரொம்ப கஷ்டப்பட்டானே உங்க பையன், அவன் இப்போ என்ன பண்றான்?"


"மொபைல்ஸ் ஷோ ரூம் வெச்சிருக்கான்"

"இப்பவும் பைல்ஸ் அவனை விடலேன்னு சொல்லுங்க..."

-oOo-oOo-oOo-oOo-


"தோழமைக் கட்சி ஒட்டிய நோட்டிஸால எதோ பிரச்னையாமே?"

'2026ல் ஆட்சியிலும் பங்கு, லஞ்சத்திலும் பங்கு'னு நோட்டிஸ் ஒட்டிட்டாங்களாம்"



டீ. என்.
பாலகிருஷ்ணன்
மடிப்பாக்கம் சென்னை
Mob No: 9884808965





இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
34

ஸ்பீடு கதைகள்

1. ஸ்டண்ட் மாஸ்டர்..... இன்னும் சமையல் செய்து முடிக்கலையா? என்ற மனைவியின் குரல் கேட்டு பயந்து நடுங்கினான் ஸ்டண்ட் மாஸ்டர் மோகன்.

2. அதிர்ஷ்டக்கல் மோதிரம்..... அதிர்ஷ்டக்கல் மோதிரத்தை அணிந்து கொண்டு அலுவலகத்துக்கு வந்த குமாரிடம், நீ இன்று முதல் வேலைக்கு வர வேண்டாம் என்று சொன்னார் மேலதிகாரி முருகேசன்.

3. டைம்..... உங்க பொண்ணுக்கு இன்னும் சரியான வரன் அமையலையா? இப்போதைக்கு உங்க டைம் சரியில்லைன்னு தோணுது என்று கடிகாரக் கடைக்காரர் கந்தசாமியிடம் சொன்னான் நண்பன் பரந்தாமன்.

4. பணக்காரர்..... கோயில் வாசலில் கையேந்தி பிச்சை கேட்கும் யாசகனுக்கு ஐந்து ரூபாய் கூட கொடுக்காத வியாபாரி கோவிந்தன் தன்னோட வியாபாரம் கொடிகட்டிப் பறக்கணும்னு கடவுளிடம் வேண்டிக் கொண்டு கோயில் உண்டியலில் நோட்டு கட்டுகளை காணிக்கையாக போட்டார்.

சி. ஆர். ஹரிஹரன்,
ஆலுவா, கேரளா.

1
"யார் அங்கே?"
"சொல்லுங்க மன்னா"
"அரண்மனை வாசலில் நிறுத்தியிருந்த என் தேர் எங்கே?"
"நீங்கள் சரியாக கப்பம் கட்டவில்லை என்று பக்கத்து நாட்டு மன்னன் எடுத்துச் சென்றுவிட்டார்."

2.
" பதுங்குகுழியை ரொம்ப ஆழமா தோண்டி விட்டோமோ!?"
" என்னாச்சு?"
"பெட்ரோல் ஊற்றெடுக்கிறது மன்னா!"



– கயத்தை சத்யா

மினிகதை



சுமை
மலர்மதி

“புத்தகப் பையை என்னால் சுமக்க முடியலைப்பா!” என சொல்லி அழுதான் மூட்டைத் தூக்கும் தொழிலாளியின் மகன்.

இயற்கை வைத்தியம்—

M. ராதாகிருஷ்ணன்,
வாணியம்பாடி -635 751



இஞ்சியை பிழிந்து உப்பு போட்டு குடித்தால் வயிற்று வலி, வயிற்று போக்கு நிற்கும். ▸ சிறிது வெங்காயத்தை அரைத்து தலையில் தேய்த்து குளித்து வர பொடுகு நீங்கும். ▸ சோயா விதையை அரைத்து தலையில் தடவி வந்தால் முடி கொட்டுதல், வழுக்கை மறையும். ▸ கசகசாவை தூளாக்கி பாலில் கலந்து இரவு சாப்பாட்டிற்கு பின் குடித்தால் வாய்ப்புண் குணமாகும். ▸ புதினா, கொத்தமல்லி இலையை அரைத்து உதட்டில் தடவி வர உதடு சிவப்பாக மாறும். ▸ இஞ்சியை தேனில் ஊற வைத்து சாப்பிட்டு வந்தால் தலை சுற்றல், பசியின்மை நீங்கும். ▸ மஞ்சள் தூளை நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி தேமல் மேல் தேய்க்க தேமல் குறையும். ▸ வெந்தயத்தை ஊற வைத்து தயிரோடு அரைத்து தலைக்கு தேய்த்தால் இரத்த கொதிப்பு குறையும்.

இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
35





வாழ்க பல்லாண்டு

காதல் பெருங்கடலில்
கவிதைப் படகோட்டி
மோதும் அலையெல்லாம்
முத்தங்களாய்ப் - போதித்துக்
காட்டித் தமிழைக் காதலிக்கும்
முத்தானந்த்
காட்டில் மழை யென்றும் காண்.

தேனெடுக்கப் பூவெல்லாம்
தேடிவரும் தேனீப்போல் பாவடிக்க
காதல் பயின்று வந்து -
தேனடைக்குள்
சேர்த்து கனியமுதாய் தித்திக்கும்
கவிச் சாறாய்
வார்த்தார் முத்தானந்த் வாழ்க.

வான் புயலை ஆய்வாளர்
வகைபடுத்தப் பேரிடுவார் தேன்
கவியால் காதலினை சீராய்ந்து -
தீந்தமிழால்
காதலினைப் பாடிக் கன்னி திருப்
பொங்கலினை
ஆதரித்தார் முத்தானந்த் ஆம்.

இன்று மின்னிதழில் இனிதாய்
வாழ்த்து பெறும் குன்றாப் புகழ்
எல்லாம் கூடிவர - என்றும்
செல்வம் தழைத்திருக்க
செந்தமிழும் மகிழ்திருக்க
பல்லாண்டு வாழ்க பாரில்.



குடந்தை
பரிபூரணன்

நாவடக்கம்

==========

வள்ளுவப் பெருந்தகை நன்றாய்
உரைத்திட்டான் ! நாவடக்கத்தின்
பெருமைதனை
தீர்க்கமாய் பகர்ந்த பின்
வானுலகம் சென்றிட்டான் !
" தீயினால் சுட்ட புண்
உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு "
அவன் வாக்கு என்றுமே
பொய்யாகிப் போகுமோ ?
பொய்யாமொழிப் புலவர் எனப்
பட்டம் சுமந்த
வித்தகர் அன்றோ!
நானும் திடமாய் உணர்ந்திட்டேன்
நாவடக்கத்தின்
பெருமைதனை !
நாள் தோறும்
இன் சொற்கள்
நான் பகர பரந்தாமன்
உன் பாதம்
பணிந்திட்டேன் !
உன்னருள்
இருந்திட்டால்
இவ்வையகம்
உய்யுமன்றோ !



பி.ஆர்.கிரிஜா,
சென்னை

www.indhru.in
2025 ஆம் ஆண்டில்
வெளியான அனைத்து
இதழ்களும் உள்ளன...

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
36

கலை கோலங்கள்



புத்தாண்டு மகளே வருக...!

புத்தாண்டின் புது மகளே
பூமித்தாயின் திருமகளே
முத்தான அன்போடு
மூவுலகைக் காப்பாய்...!

பித்தான மானுடத்தை
பீடுடைச் செய்வாய்..நல்
வித்தாக நானிலம் வளர
வீறுநடைச் செல்வாய்...!

கொத்தாக உனையள்ளி
கோடிக்கண் பார்க்க வைப்பேன்..என்
சொத்தாக உனை நினைத்து-
நாட்டில்
சோத்துப்பஞ்சம்
தீர்க்க வைப்பேன்...!

இத்துப்போன சட்டங்களை
நீர்த்துப்போக வைப்பேன்...

ஈரமுள்ள நெஞ்சத்தோடு
ஈடில்லாமல்
உழைப்பேன்...அதற்கு
புத்தாண்டின் புதுமகளே
வருக...நித்தொமொரு
புத்தின்பம்
அனைவருக்கும் தருக...!!

கவிஞர்.இல.இரவி
செ.புதூர்.612203
செல்:9952113194



இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
37

திடீர் போட்டி!

கவிதைகள்

திடீர் போட்டி முடிவுகள்

இன்று ஈ இதழ் ஆங்கில புத்தாண்டு பொங்கல் சிறப்பிதழ் 2026 இன்று என்ற தலைப்பில் 3 வரிகளில் 8 வார்த்தைக்குள் (ஹை...கூ...போல்) கவிதைகள் எழுதவும். இந்த போட்டி இன்று சேனல் மற்றும் எழுதலாம் வாங்க வாட்சப் குழுவில் இணைந்துள்ளவர்களுக்கு மட்டும் நடத்தப்பட்டது. அதில் கீழ்கண்ட கவிதைகள் வரப்பெற்றது. சிறந்த 3 கவிதைகளுக்கு தலா ரூ.50 பரிசு அறிவிக்கப்பட்டிருந்தது.

வெற்றி பெற்ற கவிஞர்கள்

1- மலர்மதி
2- நாகை பாபு
3- குடந்தை பரிபூரணன்

அனைத்து கவிதைகளும் அருமை தான்.... பங்கு பெற்ற அனைத்து கவிஞர்களுக்கும் வாழ்த்துக்கள்...

அனைவருக்கும் நன்றி...



நேற்று நடந்ததை மறந்து
நாளை நல்லதை எதிர்ப்பார்த்து
இருக்கிறோம் இன்று!

–வி.சி. கிருஷ்ணரத்னம், சென்னை.

நேற்று என்பது நினைவு
நாளை என்பது கனவு
இன்று என்பதே நிஜம்!

மு.குமரன் பண்ணந்தூர்.

இன்று என்பது
நாளைக்குள் நுழைந்ததும்
நேற்று ஆகி விடுகிறது!

– கி.ர, தூத்துக்குடி

இன்று என்ன விஷேசம்
என்று கேட்கிறீர்!
'இன்று' என்பதே விஷேசம் தான்
என்கிறார் நேற்று இறந்தவர்!

கி.ர, நெய்வேலி

'இன்று' என்பதே
விஷேசம் தான்! என்கிறார்
நேற்று இறந்தவர்!

கி.ர, நெய்வேலி

நேற்றும் நாளையும்
சொல்கிறது வாழ்ந்திடுங்கள்
'இன்று' என்று!

–ரிஷிவந்தியா, தஞ்சாவூர்.

நேற்று என்பது வயிற்றில்
நாளை என்பது தட்டில்
இன்று என்பது வாய்க்குள்.

–அதிரை யூசுஃப்

நேற்று, இன்று, நாளை
என்றில்லாமல்
தொடர்ந்து வருவதே... இன்று

மலர்மதி
✆ 8667417874

ஆன காலத்தில்
அயராது உழைத்தேன்
மகிழ்ச்சியுடன் இன்று.

சி. ஆர். ஹரிஹரன், ஆலுவா, கேரளா.
M. No. 8330850998

பால்ய பருவம்
மீண்டுவருமா..
மீண்டும் இன்று...?

– நாகை பாபு

நேற்று அனுபவம்
இன்று கவிதை
நாளை இலக்கியம்.

குடந்தை பரிபூரணன்.

நேற்றைய நாளையும்,
நாளைய நேற்றும் நிகழ்காலமாய்
தரிசிக்கக் கிடைக்கிறது இன்று!

ஸ்ரீநிவாஸ் பிரபு ✆ 9340051321

இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
38

திடீர் போட்டி!

"இன்று" செய்
"நன்றே செய்". நாளை
முடிவாய் கூட ஆகிடலாம்.

ஏ.ஜி.முகம்மது தௌபீக் மேலப்பாளையம்.

இதயம் சொல்ல மறந்தது
இன்று கூட
நிரந்தரமில்லையென்று!

–லி.நௌஷாத் கான்–

இன்று

காலத்தின் கையில்
ஒரே ஒரு
ஒற்றை நாணயம்..!

பழ.அசோக்குமார், புதுக்கோட்டை

நேற்று நன்மை செய்தவர்கள்...
இன்றல்ல... நாளையும் வாழ்கின்றனர்
மக்கள் மனங்களில்!

மு. குமரன், பண்ணந்தூர்.

விநாடி வயலில் விதையாகு/
ஆண்டுதோறும்/
அறுவடை நாளே!/

–கோவை. நா.கி.பிரசாத்

இன்று என்பது/
இல்லாமல் போகும் நாளை/
இப்போதே வாழ்ந்து விடு!/

பி. சி. ரகு,, விழுப்புரம் ✆ 6369250307

இன்று

அம்மாவின் புன்னகை
அப்பாவின் வியர்வை...
அன்பாலான கலவை..!

பழ.அசோக்குமார்

இன்று

விழுந்தால்
எழ வைக்கும்
விதை...!

பழ.அசோக்குமார் புதுக்கோட்டை

இன்று கொண்டாடிக் கொள்!
இல்லையேல் நேற்றும் நாளையும்
கொன்று தின்றுவிடும்உன்னை...

தே. ராஜாசிங் ஜெயக் குமார். தஞ்சாவூர்

நேற்று என்பது நமதில்லை
இன்று நம்முடையது
நாளையை அறியோம் நாம்

வ.பிரபாவதி, மடிப்பாக்கம்

நேற்றைய செயலின் விளைவை
இன்று அனுபவிக்கிறோம்
நாளைய செயலுக்கான தொடக்கத்தை
இன்று விதைக்கிறோம்

நாகை பாலா

நேற்று வாழ்ந்தோம்
இன்று வாழ்கிறோம்
நாளை வாழ்வோம். இதுதான் நம்பிக்கை !

எம்.பி. தினேஷ். கோவை – 25
Ph.. 9894236348

உண்ணாவிரதத்தால் எல்லாம்
சாதிக்க முடியுமானால்
இன்று யாசகம் செய்பவன்..!

எம்.பி.தினேஷ் கோவை – 25
PH : 9894236348

நேற்று விபத்தால்
மூளைச்சாவு அடைந்தவர் இன்று
வாழ்வளிக்கிறார் பலருக்கும் !

எம்.பி.தினேஷ். கோவை – 25
PH:9894236348

இன்று என்பது
நேற்றைய பிரதிபலிப்பு –
நாளையின் கனவு

நாகை பாலா

நேற்று எதிர்கட்சியில்
இன்று கூட்டணியில்
நாளை ....இது அரசியல் கணக்கு !

எம்.பி.தினேஷ் கோவை – 25

இன்று

பிறப்பும் இறப்பும் இன்றே
ஒவ்வொரு நிமிடமும் புதிதே
வாழ்வைக் கொண்டாடு ஈசலே

–இரா. ரமேஷ் பாபு

இன்று இருந்துவிடு
சந்தோஷமாக
நாளை வராது
Ayanpuaram சத்ய நாராயணன்
+91 98406 34790

இன்று

இன்றே இப்படம் கடைசி
டிசம்பர் முப்பத்தொன்று ,
இரண்டாயிரத்தி இருபத்தைந்து

இரா. ரமேஷ்பாபு

நேற்றையும் மறந்து விட்டேன்..
நாளையையும் துறந்துவிட்டேன்...
இன்று மட்டும் இனிதே வாழ்ந்து
விட்டேன் *..!

கே இந்து குமரப்பன் விழுப்புரம்

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
39

திடீர் போட்டி!

நாளை கைதுபண்ணாமல் இருக்க
இன்றே முன் ஜாமின்
வாங்குகிறார் தலைவர்.

எம்.கல்லூரி ராமன்
கரிசல்புலி.

இன்று

*நேற்றின்
நிழல் கரைந்து _
நாளை முளைக்கிறது!*

ஆர். சுந்தரராஜன், சிதம்பரம்

இன்றே செய்க !!
அதை நன்றே செய்க.!!,
பள்ளியில் ஒலித்தது சத்தமாக...!!

ஆர் மணிவண்ணன் நாகப்பட்டினம்
✆ 9786797638

இடியாப்பம் விற்பவரை
இன்று பிடித்தே ஆக வேண்டும்.
காத்திருந்தார் பைனான்சியர் !

எம்.பி.தினேஷ், கோவை – 25
PH:9894236348

இன்று

மறப்பதற்கு நேற்று
நினைப்பதற்கு நாளை
உடனே செய்வதற்கு இன்று..!

பழ.அசோக்குமார்

இன்று இப்படம் கடைசி'
என்று அறிவிக்கும் இடத்தில்
எழுதப்பட்டிருந்தது
'இன்று இத்திரையரங்கம் கடைசி'

–ராம் ஆதிநாராயணன், தஞ்சாவூர்
✆ 9443407014

இன்று
****
நேற்று கடன் வாங்கியவருக்கு
நாளை மட்டுமே
இன்று இல்லை!

தே. ராஜாசிங் ஜெயக்குமார்
தஞ்சாவூர்

நிலவை காட்டி
ஊட்டிய சோறு
செல்லை காட்டி
ஊட்டப்படுகிறது.. இன்று...

நாகை பாபு

அழகாயிருந்தது...
இன்றை நேற்றென சொல்லும்,
மழலையின்மொழி!

மு.முபாரக்

இன்று
என்றும்
நன்று!

கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி
✆ 7904428550

இன்று விதை
நாளை விருட்சம்
சூட்சுமம் தெரிந்தால் சுபிட்சம்!

– ரிஷிவந்தியா, தஞ்சாவூர்.

நேற்றைய
சிலுவைப் பாடில்
உயிர்த்தெழுந்தது இன்று.

–ரவி அல்லது.

இன்று விதை
நாளை விருட்சம்
சூட்சுமம் புரிந்தால் சுபிட்சம்!

– ரிஷிவந்தியா, தஞ்சாவூர்

நேற்று அறிவோம்/
இன்று செய்வோம்/
நாளை முயல்வோம்...

எல். மாறன், மேல்பட்டி.
✆ 9442376652.

இன்று
தருணத்தில் ஒளிரும் சூரியனை
தன்னை சுற்றிச்சொன்னது
பூமி இன்றென.

–ரவி அல்லது.

அப்பா சாப்பிட்டார் காகமாய்....
சந்தோஷத்தில் அம்மா.
இன்று அமாவாசை.

–G.SUNDARAMURTHI. MUSIRI.

நாளையொன்று
இருப்பதால்தான்
இனிய பயணமாகிறது இன்று.

–ரவி அல்லது.

கைவசம் பணமுள்ளது/–
இன்று இப்போட்டி தேவையா/
நாளை வைத்திடுங்கள்.

– கா. ஹபீப் முகமது.

நாளைய வெற்றியை
விதைக்க வேண்டிய
நல்ல நாள் இன்றுதான்!

– முத்து ஆனந்த் வேலூர்

இதழ்கள் விரித்து
இன்று சிரித்தாய்
என்னை அணைத்தது காதல்!

– முத்து ஆனந்த் வேலூர்

இன்று என்பதை இப்போதே
என்று ஆரம்பி
நாளை என்பது நலமாகும்.

– வீ.வைகை சுரேஷ்

இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
40

கண்ணாடிப் பக்கம்

அமைப்பு ரதி



ஜன்னலோர பயணம்

கண்ணீர் வடிக்க கூட
என் கண்ணில் ஈரம் இல்லை
புழுதி படிந்திருக்கும்
பழைய நினைவில்
பேருந்தில் பயணம் செய்கிறேன்

ஜன்னலோர பார்வையில்
சின்ன சின்ன பிம்பங்களாக
உன் முகத்தைக் கண்டு
பேரின்பம் கொள்கிறேன்

அது வேறொன்றும் இல்லை
நீ தூக்கி வீசப்பட்ட
வார்த்தைதான்
நீ கொடுத்த
வாக்கை நம்பித்தானே
மனக்கோட்டை கட்டினேன்

என் இதய புத்தக ஏட்டில்
நீ பேசிய ஆசை வார்த்தைகளை
தினமும் வாசித்து வருகிறேன்
நீ அர்த்தம் சொன்ன
உயிரெழுத்துக்கும்
மெய்யெழுத்துக்கும்

கவிதை உரையாடலில்
காதல் மழையில்
நனையலாம் என்று சொல்லி
முத்த மழையில்
என்னை மொத்தமாக
நனைத்தவனே

இப்பொழுது தினம் தினம்
நனைந்து கொண்டிருக்கிறேன்
கண்ணீர் மழையில்
ஜன்னலோர
பேருந்து பயணத்தில்

கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்
வெள்ளைக் கோடுகள் எல்லாம்
சிவப்புக் கோடுகளாக
தெரிகிறது
உன் பிரிவின்
இரத்தக்கண்ணீர் வடித்ததில்

பாழடைந்த என் இதயத்தை
இனி பழுது பார்க்க வராதே
காயமடைந்தே கிடக்கட்டும்
கவிதை வரிகளில்
உன் நினைவுகளோடு...



பாரதி முத்து

கதைகளில் கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள்
அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன
அல்ல...
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர்
ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241



